Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 மாசி-12 24-02-2005 வியாழக்கிழமை ஓசை 06



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-11253) விநாயகர் வீதி, மயிலிட்டி.

# கிளாலி சூனியப் பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டில் சிப்பாய் பலி

## மற்றொருவர் சம்பவத்தில் காயம்

(அலுவலக செய்தியாளர்)

**கிளாலி சூனியப்பகுதியில் நேற்று இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின்போது ஒரு இராணுவச்சிப்பாய் கொல்லப்பட்டதாகவும் மற்றுமொருவர் காயமடைந்ததாகவும் தெரிய வருகிறது .**

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது நேற்று மாலை 5.30 மணியளவில் கிளாலிப் பகுதியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குமிடையே உள்ள சூனியப்பிரதேசத்தில் விடுதலைப்புலிகளின் பெண்போராளிகளின் காவலரன் பகுதியை அண்டிய பகுதிக்குள் இரண்டு இராணுவத்தினர் ஆயுதங்களுடன் பிரவேசித்த வேளை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தின்போது ஒரு இராணுவச் சிப்பாய் காயமடைய மற்றவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாக தெரிய வருகிறது. கொல்லப்பட்டவரின் உடல் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரினூடாக இராணுவத்தினரிடம் ஒப் படைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மேற்படி சம்பவம் குறித்து விடு தலைப்புலிகள் ஆராய்ந்து வருவதாகவும் தெரிய வருகிறது. (ச)

-மேல் மாகாண சபையில் ஜே.வி.பி.-

## ஆளும் கட்சிக்கு வழங்கும் ஒத்துழைப்பை விலக்கலாம்

மேல்மாகாண சபைக்குள் ஜே.வி.பி. ஆளும் கட்சிக்கு வழங்கும் பங்களிப்பில் மாற்றம் ஏற்படுவதற்கான வாய்பிருப்பதாக ஜே.வி.பி. எச்சரித்துள்ளது. இது தொடர்பாக கருத்து வெளியிட்ட ஜே.வி.பியின் மாகாணசபை உறுப்பினர் வருண தீப்த்தி ராஜபக்ச மேல்மாகாண சபையின் கட்டுப்பாட்டிலுள்ள மாகாண கல்வித்துறையிலும் போக்கு வரத்துத் துறையிலும் பல துஸ்பிரயோகங்கள் நடைபெறுகின்றன உயர்மட்ட உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் பதவி உயர்வுகள் தொடர்பில் பல குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இந்த அனைத்து நடவடிக்கைகளும் முதலமைச்சரின் தனிப்பட்ட விருப்பப்படியே நடை பெறுக்கின்றது. சுனாமி அனர்த்தம் ஏற்பட்டபோது மாகாண சபையி னிலுள்ள எந்தக்கட்சியின் கருத்துக்களும் எடுத்துக் கொள்ளப்பட வில்லை. கூட்டுறவுச் சங்கங்களின் (12ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் குறித்து கண்காணிப்புக்குழுவுக்கு முறையீடு

### – இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கிளாலிப்பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்ப வம் தொடர்பாக கண்காணிப்புக் குழுவிற்கு அறிவித்துள்ளோம் என இராணுவப் பேச்சாளர் தயா ரட்ணாயக்கா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் கிளாயில் விடுதலைப்புலிகளின் காவலரணுக்கும் இராணுவத் தினரின் காவலரணுக்கும் இடையே உள்ள இடத்தில் இரண்டு படை யினர் சுடப்பட்டுள்ளனர். இதனால் ஒரு சிப்பாய் கொல்லப் பட்டதாக நம்பப்படும் அதேவேளை ஒருவர் காயமடைந்துள்ளார் காயமடைந்தவர் பலாலி இரா ணுவ மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டுள்ளார். காயமடைந் தவரின் தகவலின் படியே ஒருவர் கொல்லப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

துப்பாக்கிப்பிரயோகம் நடை பெற்றமையினால் அந்த இடத் திற்கு எங்களால் செல்ல முடிய வில்லை. அந்த உடலையும் மீட்க (12ஆம் பக்கம் பார்க்க)

## வடகிழக்கு உளவளத்துணை கட்டமைப்புக்கு மாவட்ட ரீதியாக பிரதிநிதிகள் தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

வடகிழக்கு உளவளத்துணை கட்டமைப்புக் கூட்டம் நேற்று கிளி நொச்சி கரடிப்போக்கில் அமைந் துள்ள வடகிழக்கு மனித உரிமை கள் செயலகத்தில் நடைபெற்றது.

வண பிதா எம்.எக்ஸ். கருணா ரெத்தினம் அவர்கள் தலைமை யில் நேற்று பகல் 10.00 மணிக்கு ஆரம்பமான மேற்படி கூட்டத்தில் வடகிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வைத்தியர்கள்,உலக சுகா தார நிறுவனப் பிரதிநிதிகள், அரச (12ஆம் பக்கம் பார்க்க)





## சுனாமியால் பாதிக்கப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உதவுதொகை, ஈருருளிகள் வழங்கல்

சுனாமிப் பேரலை அனர்த்தத் தினால் பாதிப்புற்ற முன்பள்ளி ஆசிரியர்களின் 60ஆம் நாள் நினைவினை முன்னிட்டு பாதிப் புற்றவர்களுக்கான உதவு தொகை வழங்கல் நிகழ்வு முல் லைத்தீவு மாவட்ட தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தில் இடம்பெற்றது.

நோர்வே தமிழர் புனர் வாழ்வுக் கழக அன்பளிப்புடனும், தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப் பணியக அனுசரணையுடனும் வட கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் நடாத்திய இந்நிகழ்விற்கு கட்ட மைப்பின் உப தலைவர் சி.சிவ னேசன் அவர்கள் தலைமை வகித்தார்.

நேற்றுக் காலை 10.00 மணி யளவில் ஆரம்பமான இந்த நிகழ் வில் பொதுச்சுடரினை வடமராட்சி கிழக்குப் புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் சிவஞானம், பிர தேச கட்டமைப்புத் தலைவர் சுரேஸ்குமார் ஆகியோர் ஏற்றி வைத்தனர். இதனைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந் தன், தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியினை கழகத்தின் உதவி நிதிப்பொறுப்பாளர் செல்வம் அவர்களும் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையக் கொடி யினை கட்டமைப்பு யாழ்.மாவட்ட (12ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகம் தொடர்பாக மட்டும் புலிகளுடன் பேச்சு நடத்த முடியாது!

### இறுதித்தீர்வு பற்றியும் பேசப்பட வேண்டுமாம் -அரசாங்கம்

தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக் காலநிர்வாகசபையோசனைகளை மட்டும் அடிப்படையாகக்கொண்டு பேச்சுக்களை நடத்த முடியாது என்றும் இடைக்கால நிர்வாக சபையோசனைகளின் அடிப்படை யில் நேரடிப் பேச்சுக்கள் நடத் தப்படும் அதேவேளை இறுதித் தீர்வு குறித்து பேசப்பட வேண்டும் என்றும் பேச்சுவார்த்தை மேசை யில் தமது மாற்று யோசனைக ளும் முன்வைக்கப்படும் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டு மூன்று ஆண்டுகள் நிறைவடைந்தமையை முன்னிட்டு அரசாங்கம் நேற்று அறிக்கை ஒன்றைவெளியிட்டுள்ளது.அந்த அறிக்கையில் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளது. பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் இடைக்கால நிர்வாகம் தொடர்பான முதலா வது யோசனை முன்வைக்கப் பட்டதாகவும் தொடர்ந்து ஐக்கிய தேசிய முன்னணி இந்த விடயம் தொடர்பில் மூன்று யோசனை களை வெளியிட்டுள்ளதாவும் குறிப்பிட்டுள்ளஅரசாங்கம் இடைக் கால நிர்வாக சபை யோசனை ஒன்றை விடுதலைப்புலிகள் முன் வைத்திருப்பததையும் சுட்டிக்காட் டியுள்ளது.இடைக்கால நிர்வாக சபை ஒன்று உருவாக்கப்படுவதன் (12ஆம் பகுகம் பார்க்க)

## ஹக்கீமுடன் சந்திப்பு

கொழும்பில் தங்கியுள்ள நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் நேற்று சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலை வர் ரவூப் ஹக்கீமை சந்தித்துள் ளார்.

இச்சந்திப்பின் போது சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய மீள்கட்டுமானப் பணிகள் குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட் டுள்ளது. மீள்கட்டுமானப் பணிக (12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மாவட்ட நீதிமன்றம்-முல்லைத்தீவு

வழஇல :-181/98

தன்மை :- மணநீக்கம்

<u>வழக்காளி</u>
கணபதிப்பிள்ளை-பேரின்பநாதன்,
1ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

<u>எதிராளி</u>
பேரின்பநாதன்- பிறேமகுமாரி,
1ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

### இடைக்காலத் தீர்ப்பு

மேற்படி இலக்க வழக்காளி எதிராளி மன்றில் தவணைகளுக்கு தோன்றாது இப்பிரதேசத்தை விட்டு வெளியேறியமையால் எதிராளிக்கான அறிவித்தல் ஈழநாதம் பத்திரிகையில் 09.02.1999 அன்று பகிரங்க அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு எதிராளியோ அவரைச்சார்ந்தவர்களோ நீதிமன்றில் தோன்றி நடவடிக்கை மேற்கொள்ளத் தவறியமையால் 14.07.1999 அன்று மாவட்ட நீதியாளர் செல்வி.வே.அல்லிராணி அவர்கள் முன்னிலையில் ஒருமுக விளக்கம் நடைபெற்று 01.09.1999 அன்று பின்வருமாறு இடைக்காலத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

வழக்காளியின் 1ஆம் உரிமைக்கோரிக்கையான திருமணப் பதிவை இரத்துசெய்து நிரந்தர விவாகரத்து கோரிக்கையை ஏற்றும் 2ஆம் உரிமைக்கோரிக்கையான பிள்ளைகள் தன்னிடம் பெற்றுத்தருமாறு கோரப்பட்ட உரிமைக்கோரிக்கை தொடர்பில் பிள்ளைகள் இப்பிரதேசத்திற்கு வரும் பட்சத்தில் அவ்விடயம் தொடர்பாக மன்று ஆராயும் எனவும் 3ஆம் உரிமைக்கோரிக்கையான வழக்குச் செலவுடன் வழங்கப்பட்ட இடைக்காலத் தீர்ப்பில் வழக்காளி தனது 3ஆம் உரிமைக் கோரிக்கையைக் கைவிட்டு மன்றினால் வழங்கப்பட்ட இடைக்காலத் தீர்ப்பு தீர்வையாக பதியப்படுகின்றது.

இத்தீர்வை பிரசுரிக்கப்பட்டு 21 நாட்களுள் எதிராளியோ அல்லது அவரைச் சார்ந்தவர்களோ மன்றில் தோன்றி பொருத்தமான நடவடிக்கை எடுக்கத்தவறின் இத்தீர்வை முற்றான தீர்வையாக பதியப்படும்.

நீதியாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று, முல்லைத்தீவு.

வரைபு:-சட்டவாளர் (5696)

---

care

# vacancies

**Following vacancies exist for tsunami Rehabilitation and Development Project At Kilinochchi, Mullaitivu & Vaddamarachchi East**

01. Team Leaders
02. Project Coordinators (Construction, Monitoring &Evaluation and Social Modilization & Gender)
03. Project Officers (Construction, Water & Sanitaton, Fishing, Social Mobilization and Income Generation)
04. Finance Officers
05. Administrative Officers
06. Logistics Officers
07. Procurement Officers
08. Administrative Assistants
09. Finance Assistants
10. Procurement Assistants
11. Store Assistants
12. Custodian
13. Security Guards
14. Drivers

**Please apply immediately ( on or before th26 of February 2005) for following one of the address**

1.CARE Inter national - Sri Lanka
Ward No-8,
Manthuvil,
Puthukudiruppu
Mullaitivu.

2.CARE Inter national - Sri Lanka
No.133,
Kandy Road
Paranthan,
Kilinochchi
TP: 021 2285093

(சி.11502)

---




---

# இங்கிலாந்து வைத்திய நிபுணரின் காது, மூக்கு,தொண்டை சிகிச்சைகள்

(கிளிநொச்சி)

இங்கிலாந்தில் இருந்து வருகைதந்துள்ள காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர் டாக்டர் ரஞ்சித் தம்பிராஜ் இன்று காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையிலும் நாளை புதுக்குடியிருப்பில் உள்ள டாக்டர் பொன்னம்பலம் மருத்துவமனையிலும் வைத்து சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளார்.

பயன் பெற விரும்புவோர் இச் சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (சோ)

# ஜெயபுரம் பகுதியில் பாரவூர்தி மரத்தில் மோதியது; சாரதி காயம்

(ஜெயபுரம்)

ஜெயபுரம் பகுதியின் பாரவூர்தி ஒன்று பாதையை விட்டு விலகி மரத்துடன் மோதிய சம்பவத்தில் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பகுதியிலிருந்து எரு ஏற்றுவதற்காக வந்த வேளையே இச்சம்பவம் நேற்று நண்பகல் இடம் பெற்றுள்ளது.

சண்டிலிப்பாய் தென்னிந்தியத் திருச்சபை அருகாமையில் உள்ள சி. கணேஸ்வரன் என்றவரே காயமடைந்த நிலையில் முழங்காவில் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளார்.

## வரிவிளம்பரம்

### வேலையாள் தேவை

அரசி அரைக்கும் ஆலைக்கு நன்கு அனுபவமுள்ள வேலையாள் தேவை அனுபவத்தின் அடிப்படையில் சம்பளம் பேசித் தீர்க்கப்படும், விரும்பியவர்கள் நேரில் சந்திக்கவும். அரசி அரைக்கும் ஆலை மாத்தளன் வீதி புதுக்குடியிருப்பு. (5739)

### தவறிவிட்டது

செல்வாநகரை வதிவிடமாகக் கொண்ட கருப்பன் காளியப்பன் என்பவருடைய தற்காலிக அடையாள அட்டையும், காளியப்பன் சறோஜினி என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் 20.02.2005 ஆம் திகதி A.G.A கந்தோர் சிற்றுண்டிச் சாலையில் வைத்து தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை கிளிநொச்சியில் ஒப்படைக்கவும் தகவல் க.காளியப்பன். (5746)

## கலந்துரையாடல் நடைபெறமாட்டாது

நிகோட் கார்ப் நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின்முன்னேற்றங்கள் தொடர்பான கலந்துரையாடல் திட்டமிட்டபடி எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெற மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடல் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என முல்லை மாவட்ட நிகோட் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (20)

## முக்கிய அறிவித்தல்

திருமுறிகண்டி இந்து வித்தியாலய பழையமாணவர்களுக்கான ஒன்று கூடல்.

இடம்:- திருமுறிகண்டி பாடசாலை.


காலம்:- 27.02.2005 மாலை 3.00 மணி.

(சி.11501) தகவல் அதிபர்.

---



# கவி போட்டோ அன் வீடியோ மீண்டும் புதுப்பொலிவுடன் ஆரம்பம்



**கடந்த 26.12.2004 அன்று முல்லைத்தீவில் ஏற்பட்ட சுனாமி காரணத்தால் முழுப் பொருட்களும் இழந்த நிலையில் மீண்டும் புதுப் பொலிவுடன் 23.02.2005 பழைய இடத்தில் ஆரம்பமாகியுள்ளது என தனது நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றார்.**

உரிமையாளர்,
சி.கணேசபூபன்,
(பெரியதம்பி).

(சி.11503)

---

# சாவு அறிவித்தல்

## செபமாலை முத்து செபநேசன் (றெக்சன்)


இரணைப்பாலையை பிறப்பிடமாகவும் தற்போது பிரான்சில் வசித்து வந்தவருமான செபமாலை முத்து செபநேசன் [றெக்சன்] அவர்கள் 22.02.2005 அன்று பிரான்சில்அகாலமரணமடைந்தார். அன்னார் செபமாலை முத்து திரேசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மார்சலா [ஜெனி],றொக்சிலா, நிலானி, நிறஞ்சலா, சித்திரா, ஜெயப்பிரகாஷ், றீகன் , ஜான்சலா, சிந்துஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
செபமாலை முத்து
(அருமைநாயகம்)

(5697)

# சீனாவுக்கான ஆயுத விற்பனை தடை நீக்கப்பட்டால் அமெரிக்க படையினருக்கு ஆபத்து ஏற்படும்

## எச்சரிக்கிறார் ஜோர்ஜ் புஷ்



(பிரசெல்ஸ்)

**சீனாவுக்கானஆயுதவிற்பனை தொடர்பாக தடை நீக்கப்பட்டால் இராணுவ சமநிலை பாதிக்கப்பட்டு ஆசியாவில் உள்ள அமெரிக்க படையினருக்கு ஆபத்து ஏற்படலாம் என்று அச்சம் தெரிவித்துள்ளார் அமெரிக்க சனாதிபதி புஷ்**

பாதுகாப்பு தொடர்பாக அமெரிக்கா கொண்டுள்ள கவலைக்கு பரிகாரம் காணும் திட்டமென்றை வகுப்பதில் ஐரோப்பிய நாடுகள் தற்போது ஈடுபட்டு வருவதாக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

26 நாடுகள் அங்கம் வகிக்கும் நேட்டோ உச்சி மாநாட்டின் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய போதே புஷ் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கான ஆயுத விற்பனை தொடர்பாக தடை நீக்கப்பட்டால் இராணுவ சமநிலை பாதிக்கப்பட்டு ஆசியாவில் உள்ள அமெரிக்க படையினருக்கு ஆபத்து ஏற்படலாம் என்று அச்சம் கொண்டுள்ள அமெரிக்க காங்ரஸ் இந்தத் தடையை ஐரோப்பா நீக்கினால் ஐரோப்பாவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பாக குறிப்பிடப்படாத சில கட்டுப்பாடுகளை கொண்டு வரப் போவதாக அச்சுறுத்தியுள்ளது.

சீனா 1981 ஆம் ஆண்டு றியனன் லான்ஸ் சதுக்கத்தில் சன நாயக ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர் களை வன்முறை மூலம் அடக்கியதை அடுத்து அந் நாட்டுக்கு எதிராக ஐரோப்பா ஆயுத விற்பனைத் தடையை கொண்டுவந்தது.

இதேவேளை ஐரோப்பிய ஒன்றிய தலைமை அலுவலகத் திற்கு அமெரிக்க சனாதிபதி புஷ் விஜயம் செய்வதற்கு எதிர்ப்புக் காட்டும் வகையில் பெல்ஜியத்தில் நூற்றுக் கணக்கானோர் ஆர்ப்பாட் டம் செய்தனர்.

# ஈரானில் நேற்று ஏற்பட்ட பூமி அதிர்ச்சி மீட்புப் பணி தாமதம்; உயிரிழப்பு அதிகரிக்கலாம்

ஈரானின் தென்கிழக்கு பிராந்தியத்தில் உள்ள மலைப்பிரதேச கிராமத்தில் பூமி அதிர்ச்சி நடைபெற்று 24 மணி நேரத்தின் பின்னர்



இரு இளம் பெண்கள் இடிபாடுகளுக்குள் இருந்து உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

ஈரானில் இடம் பெற்ற சக்தி வாய்ந்த பூமி அதிர்ச்சி காரணமாக 500 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். பனி மூட்டமும் சேதமடைந்த வீதிகளும் மீட்பு நடவடிக்கைகளுக்கு குந்தகமாகவுள்ளன. உள்ளூர் மக்களும் சிறப்பு காவல் படையினரும் கைகளாலும் மற்றும் கருவிகளாலும் மண்ணை அகற்றி மீட்புப் பணிகளில் ஈடுபட்டுவருகின்றனர்.மீட்டு நடவடிக்கை மெதுவாக இடம் பெற்று வருவதாக நிவாரண பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். சுமார் 900 பேர் காயமடைந்திருப்பதாக அதிகாரிகள் கூறியுள்ளனர். நேற்று வரை பாதிக்கப்பட்டோருக்கு கூடாரங்களை மாத்திரமே வழங்கக் கூடியதாக இருந்தது என்று மீட்புப் பணியாளர்கள் கூறுகின்றனர்.





ஈரானில் நில நடுக்கத்தில் தனது குடும்பத்தினரை இழந்த பெண்மணி ஒருவர் கதறி அழுகின்றார்.

# போதைப் பொருள் கடத்திய இந்தியருக்கு மரண தண்டனை


(டுபாய்)

இந்தியாவைச் சேர்ந்த ஷாஜகான் அதிபர் ம்பீல் சவுதி அரேபியா நாட்டுகுள் ஹெரோயின் என்ற போதைப் பொருள் கடத்தியதாகப் பிடிபட்டார். அவர் மீதான வழக்கை தமாம் நகர நீதிமன்று விசாரித்து அரவது தலையை துண்டித்து மரண தண்டனை அளிக்கும்படி தீர்ப்புக் கூறியது. சுப்ரீம் கோர்ட்டிலும் இந்த தண்டனை உறுதி செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து நேற்று அவரது தலை துண்டிக்கப்பட்டு மரண தண்டனை நிறை வேற்றப்பட்டது. இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 12 பேருக்கு மேல் இது போல மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



ஈராக்கின் அரசியல் மாற்றத்திற்கு அச்சுறுத்தலாக உள்ள கலவரங்கள் தொடரும் வேளையில் மொசூலில் அமெரிக்க மறைந்து தாக்கும் (Snipers) படையினர் நிலையெடுத்து நிற்கின்றனர்.

# சர்வாதிகாரமான போக்கை கடைப்பிடிக்கிறார் புட்டின் சாடுகிறார் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்



புஷ்

(பிரசெல்ஸ்)

"ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் சர்வாதிகாரப் போக்கை கடைப்பிடிக்கிறார். ஒரு ஐரோப்பிய நாடு போல ரஷ்யா வளர்ச்சி அடைய வேண்டும். எனில் அந்நாட்டு அரசு சனநாயக ரீதியான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதோடு, சட்டத்தின் ஆட்சியையும் நிலை நிறுத்த வேண்டும்" என அமெரிக்க சனாதிபதி புஷ் கூறியுள்ளார்.

சுலோவாக்கியா நாட்டின் தலை நகர் பிரதிஸ்லாவாவில் இன்று நடைபெறும் மாநாட்டில் ரஷ்ய சனாதிபதி விளாடிமிர் புட்டினும், அமெரிக்க அதிபர் புஷ்சும் சந்தித்துப் பேசவுள்ளனர். இந்த நிலையில் 25 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஐரோப்பிய யூனியன் தலைமையகம் அமைந்துள்ள பிரசெல்ஸ் நகரில் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ்டபிள்யூ புஷ் கூறியதாவது:

ரஷ்ய அதிபர் புட்டின் சர்வாதிகாரப் போக்கை கடைப்பிடிக்கிறார். ஐரோப்பிய நாடுகளைப் போல ரஷ்யாவும் வளர்ச்சிப் பாதையில் செல்லவேண்டியது அவசியம். ரஷ்யாவில் சட்டத்தின் ஆட்சி மற்றும் சனநாயகத்தை நிலை நாட்ட அந்நாட்டு அரசாங்கம் முழு முயற்சி எடுக்க வேண்டும் வாய்ப்பிருந்தால் இந்த ஆண்டு உலக வர்த்தக அமைப்பில் ரஷ்யாவும் இணைய வேண்டும். இந்த விடயத்தில் ரஷ்யா எடுக்கும் முயற்சிகளுக்கு அமெரிக்கா துணை நிற்கும்.



விளாடிமிர் புட்டின்

உலக வர்த்தக அமைப்பில் உறுப்பினராக சேரும் நாடுகள் பொருளாதார தாராளமயமாக்கல் மற்றும் சர்வதேச திறந்த வெளிச்சந்தைகளை அறிமுகப்படுத்தி இருக்க வேண்டும். இதன் மூலம் அந்தந்த நாட்டு மக்களின் கருத்துக்கள் வெளிப்படையாகத் தெரிய வாய்ப்பு ஏற்படும் சீர்திருத்தங்கள் என்பது ஒரே இரவில் நடந்துவிடாது என்பதை நாங்கள் உணர்ந்தே இருக்கிறோம். பத்திரிகை சுதந்திரம், எதிர்கட்சி சனநாயகம் அதிகாரப் பங்கீடு மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றுக்கு ஆதரவு தருவதில் தான் நமது கூட்டணியே உள்ளது என்பதை ரஷ்யாவுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன் இவ்வாறு புஷ் கூறினார்.

# ஜப்பான் மன்னரின் வாரிசாக பெண்ணை நியமிக்க புதிய சட்டம்

(டோக்கியோ)

ஜப்பான் மன்னரின் பட்டத்து வாரிசாக பெண் குழந்தையை நியமிக்க வகைசெய்யும் சட்டம் கொண்டு வரப்பட [illegible]க்கிறது.

ஜப்பான் மன்னர் [illegible] இவருக்கு வயது 71 அவ[illegible]க்கு பிறகு அவரது மகன் நாகுஹிட்டோ மன்னர் ஆவார். நாகு ஹிட்டோவுக்கு வயது 45 அவரது மனைவி மசாகோ வயது 41 இவர்களுக்கு ஒரே ஒரு மகள் இருக்கிறார். வெயர் ஐகோ 3 வயது ஐகோ தவிர ஆண் குழந்தை கிடையாது.

ஜப்பான் நாட்டுச் சட்டப்படி மன்னரின் பட்டத்து வாரிசாக ஆண குழந்தைதான் வரமுடியும் பெண் குழந்தை பட்டத்து வாரிசாக வரமுடியாது. இளவரசர் நாகு ஹிட் டோவுக்கு ஆண் குழந்தை கிடையாது. இதனால் பட்டத்துக்கு வரப்போவது யார்? என்ற கேள்வி ஜப்பானியர்களிடம் மிகப்பெரிய சர்ச்சையை உருவா[illegible]கியது.

[illegible] வட்டாரங்கள் இந்த சார்ச் [illegible] இப்போது முற்றுப்புள்ளி வை[illegible]ளது. இளவரசி ஐகோதான் பட்டத்துக்கு வருவார். இதற்கு வழி வகுக்கும் வகையில் சட்டம் திருத்தப்படும் என்று அரசு வட்டாரம் தெரிவித்துள்ளது.

ஜப்பான் மன்னர் பாரம்பரியம் 2 ஆயிரத்து 600 ஆண்டு பழமையானது. 1960ஆம் ஆண்டுக்குப் பிறகு மன்னர் குடும்பத்தில் ஆண் குழந்தை பிறக்கவில்லை. இதனால் 200 ஆண்டுகளில் முதல் முறையாக ஒரு பெண் ராணியாக இருந்து நாட்டை நிர்வாகிக்க அனுமதி அளித்து சட்டம் திருத்தப்படுகிறது.



கடந்த 12 ஆம் திகதி பிரேசிலின் அனப்புலில்லில் படுகொலை செய்யப்பட்ட அமெரிக்க சன்னியாசினி தொறதிஸ்ரங்கிற்காக கிராம வாசிகள் கவலையுடன் பிரார்த்தனையில் ஈடுபடுகின்றனர்.

# நேபாளத்தில் முழு கதவடைப்பு தீவிரவாதிகள் 12 பேர் பலி

நேபாளத்தில் மன்னர் ஞானேந்திராவுக்கு எதிராக கடந்த 10 நாட்களுக்கு மேலாக முழு அடைப்பு போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

சிந்துரவி மாவட்டத்தில் உள்ள டக்காவா கிராமத்தில் இராணுவத்தினர் ரோந்து சுற்றிக் கொண்டிருந்தனர். அப்போது அவர்களை நோக்கி தீவிரவாதிகள் சரமாரியாக சுட்டனர்.இராணுவமும் எதிர்த்தாக்குதல் நடத்தியது. இந்தத் துப்பாக்கிச் சண்டையில் 12 தீவிராவாதிகள் பலியானார்கள். பலியானவர்களின் உடல்களை தீவிரவாதிகள் எடுத்துச் சென்றுவிட்டனர்.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இயற்கை நீர்வளங்களுக்கு பாரிய அச்சுறுத்தல்

## ஐக்கிய நாடுகள்சபை அறிக்கை

**சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளின் இயற்கை நீர்வளங்கள் பாரிய அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அநேகமானகுடிநீர்க் கிணறுகளில் உவர் நீர் கலந்துள்ளதால் அந்த நீரைக் குடிப்பதற்கு பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் சுற்றாடலுக்கு ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்யும் முகமாக ஐக்கிய நாடுகள் அமைப்பு இந்த அறிக்கையைத் தயாரித்துள்ளது. குறிப்பிட்ட அறிக்கையில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட இந்தோனேஷியா, மாலைதீவு, தாய்லாந்து, சீசல், சோமாலியா, இலங்கை ஆகிய நாடுகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் பயிர்ச்செய்கை நிலங்களில் உவர் நீர் கலந்துள்ளதால் குறுகிய காலப்பயிர்களுக்கு விரும்பத்தகாத பாதிப்புக்கள் ஏற்படலாமெனவும் ஐக்கியநாடுளின் அமைப்பு தெரிவித்துள்ளது.

# வீதி திருத்த வேலை ஆமை வேகத்தில் போக்குவரத்தில் மக்கள் அசௌகரியம்

(புதுக்குடியிருப்பு)

நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படாதிருந்த புதுக்குடியிருப்பு - ஒட்டுசுட்டான் வீதியின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அவை ஆமைவேகத்தில் நகர்ந்து கொண்டு செல்கின்றன. இதனால் பயணிகளும்,வாகன உரிமையாளர்களும் பெரும் அவலங்களை எதிர் கொண்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு-புளியங்குளத்துக்கான இப்பிரதான வீதியின் முக்கியத்துவம் உணரப்பட்டு வேலையை வேகமாக நகர்த்த வேண்டிய தேவை இருந்த போதிலும் அவை ஆமை வேகத்தில் இடம் பெறுகின்றமை மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது.இதனால் வவுனியாவிலிருந்தோ அல்லது கொழும்பிலிருந்தோ புதுக்குடியிருப்புக்கு பாரஊர்திகளில் பொருட்களைக் கொண்டு வருகின்றவர்களில் பலர் கிளிநொச்சி சென்றே வரவேண்டியுள்ளது. (08)

# சனாதிபதி வேட்பாளராக மகிந்தவை நியமிக்குக! சு.கட்சி பிரமுகர்கள் சனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளராக பிரதமர் மகிந்தராஜபக்ஷவை நியமிக்குமாறு பல மாவட்டங்களைச் சேர்ந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி பிரமுகர்களும் மாகாண முதலமைச்சர்கள், மாநகர, நகர சபைத் தலைவர்கள் உறுப்பினர்களெனப் பலர் கட்சியின் தலைமைப்பீடத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை சனாதிபதி மாளிகையில் நடைபெற்ற கட்சிக்கூட்டமொன்றின் போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது. கூட்டத்துக்கு சந்திரிகா வரத் தாமதம் ஏற்பட்டதையடுத்து பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த டி.எம்.ஜயரத்ன தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஐ.தே கட்சியின் சனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரம சிங்க நியமிக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டிய குழுவினர் தமது தரப்பில் விரைவில் வேட்பாளரை அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பலத்த வாக்குவாதம் ஏற்பட்டதுடன் அது தொடர்பாக தலையிட்ட மகிந்தராஜபக்ஷ இவ்விடயம் தீவிரமாக பரிசீலிக்கப்பட வேண்டியிருப்பதால் அது தொடர்பாக பிரச்சினைகளை உருவாக்குவது அவசியமல்ல என்று தெரிவித்துள்ளார்.

# வவுனியாவில் பேடன் பவல் பிறந்த தின விழா

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்ட சாரணர் சங்கத்தினால் சாரணியத் தந்தை பேடன் பவல் பிரபுவின் 148 ஆவது பிறந்த தினவிழா நேற்று முன்தினம் நடபெற்றது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய ஐயாத்துரை மண்டபத்தில் காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நிகழ்விற்கு வவுனியா மாவட்ட சாரணிய சங்கத் தலைவர் க.சீனிவாசகம் அவர்கள் தலைமை தாங்கினார். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா அரச அதிபர் சி.சண்முகம் அவர்களும் சிறப்பு விருந்தினராக வவுனியா மாவட்ட சாரணர் உதவி ஆணையாளர் செ.சிவகுமாரன் அவர்களும் கலந்து கொண்டனர்.

வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற பேடன் பவல் பிறந்த தின விழாவில் சிரேஷ்ட சாரண ஆசிரியர்களான திருமதி. நடேசமூர்த்தி, மு. பிரேம்குமார், சி.வரதராஜன், திருமதி.வி.யோகராஜா ஆகியோரும், சாரணர்களும் கலந்து கொண்டனர். (10)

# வட்டக்கச்சி ஆறுமுகம் வீதி திட்ட உபகுழு அங்குரார்ப்பண நிகழ்வும், நிர்வாகத்தெரிவும்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி ஆறுமுகம் வீதி திட்டஉபகுழு அங்குராப்பண நிகழ்வானது கடந்த வியாழக்கிழமை ஆறுமுகம் வீதி முருகன் ஆலயத்தில் கிளிநொச்சி திட்ட முகாமையாளர் பொன்.நித்தியானந்தம் தலைமையில் இடம்பெற்றது.

இத்திட்ட உபகுழுவின் தலைவராக இ.பசுபதிப்பிள்ளையும் உபதலைவராக க.பொன்னுத்துரையும் செயலாளராக பொ.பத்மநாதனும், உபசெயலாளராக க.கமலேஸ்வரனும் பொருளாளராக, ஐ.தருமராசாவும் நிர்வாக உறுப்பினர்களாக சொ.அற்புதநாதன், யோ.சிவகுமார், க.சுப்பிரமணியம், வை.பசுபதிஆகியோரும், கணக்குப் பரிசோதகராக வே.சிவநேசனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந் நிகழ்விற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வட்டக்கச்சிப் பகுதிப் பொறுப்பாளர் திரு.யோகராசாவும், கிளி.கிழக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சுமேந்திராவும், தமிழீழ பொருண்மிய நிறுவன கிளி.கிழக்கு இணைப்பாளர் றொஜிட்டும் கலந்துகொண்டு புதிய சிலதிட்டங்கள் பற்றி ஆராய்ந்தும் அவற்றை வழி நடத்தும் முறைகள் பற்றியும் கருத்துரை வழங்கினர். (12)

## ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்

(மன்னார்)

மன்னார் கட்டாடிவயல் சந்தியில் இருந்து எஸ்.ஜேசுராசன் குரூஸ், பேசாலை தெற்கு என்ற முகவரியையுடைய அடையாள அட்டை மற்றும் அனுமதி உறுதிச்சிட்டை என்பன கண்டெடுக்கப்பட்டு மன்னார் மாவட்ட தமிழீழ நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## திருக்கேதீஸ்வரத்தில் சிரமதானப்பணி

(மன்னார்)

எதிர்வரும் மகாசிவராத்திரியை முன்னிட்டு நேற்று திருக்கேதீஸ்வரத்தில் மாபெரும் சிரமதானப்பணி நடைபெற்றது.

இதனை மன்னார் சித்திவிநாயகர் விளையாட்டுக்கழகம் ஏற்பாடுசெய்தது. நூறுக்கு மேற்பட்டவர்கள் இதில் கலந்து கொண்டு ஆலயப் பகுதிகளைத் துப்புரவு செய்தனர். அத்துடன் வீதிகளில் பற்றைகள் அகற்றும் பணிகள் இடம்பெற்றன. (18)

# வீதி ஒழுங்கு குறித்த கண்காணிப்பில் காவல்துறையினர் தீவிரம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி காவல் பணிமனையினர் வீதி ஒழுங்குகளில் தீவிரமான கண்காணிப்பை மேற்கொண்டு வருகின்றனர். தமது இந்தப் பணிக்கு பொது மக்களை ஒத்துழைப்பு வழங்குமாறும் வட்டக்கச்சி காவல் பணிமனையினர் கேட்டுள்ளனர்.

இப் பிரதேசத்தில் வாகனங்களுக்கு இருபக்க கண்ணாடி இல்லாது செல்லுதல், இரவு வேளைகளில் ஒளி இல்லாது பயணித்தல், இரவு வேளைகளில் வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் மின் ஒளிச்சமிக்கை இடுதல் அளவுக்கதிகமான பொருட்கள்ஏற்றுதல், வாகனங்களை விட நீளமான பொருட்கள் ஏற்றி இருந்தால் சிகப்புக் கொடிகட்டுதல், வேகக் கட்டுப்பாட்டை மீறிப் பயணித்தல் போன்ற முக்கிய விடயங்களை காவல்துறையினர் கண்காணித்தும் வருகின்றனர். இந்த நடவடிக்கைக்கு அனைத்து மக்களும் ஒத்துழைப்பு வழங்குமாறு வட்டக்கச்சி காவல் பணிமனையினர் கேட்டுள்ளனர்.



கரைச்சிப் பிரதேச செயலர்பிரிவிற்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் செயலர்களுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் கரைச்சி பிரதேச செயலர் செல்வி-சுலோஜினி தலைமையில் கரைச்சிப் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. மேற்படி கலந்துரையாடலில் கலந்து கொண்ட கிராம அபிவிருத்திச்சங்கப் பிரதிநிதிகளைப் படத்தில் காணலாம். (படம் சோதி)

## -தேசிய உதைபந்தாட்ட சம்மேளனம்-

# பாடசாலைகள், கழகங்களுக்கு பந்துகள் அன்பளிப்பு

(வவுனியாசெய்தியாளர்)

தேசிய உதைபந்தாட்ட சம்மேளனம் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள்,விளையாட்டுக்கழகங்கள் என்பவற்றிற்கு பந்துகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

பந்துகளை வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 19 விளையாட்டு கழகங்களுக்கும் 21 பாடசாலைகளுக்கும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 20 விளையாட்டுக் கழகங்களுக்கும் 12 பாடசாலைகளுக்கும் பந்துகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன்-கிஷோர், விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பாளர் மாறன், வவுனியா அரச அதிபர் சி.சண்முகம், வவுனியா மேலதிக அரச அதிபர் இரகுநாதபிள்ளை உட்பட பலர் கலந்து கொண்டனர். (10)

# 40 தற்காலிக வீடுகள் மக்களிடம் கையளிப்பு

(முல்லைத்தீவு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிலாவத்தை அன்னம்மாள் கோவிலடியில் அமைக்கப்பட்ட தற்காலிக வீடுகள் நாற்பது சிலாவத்தை தீர்த்தக்கரை மக்களுக்கு கடந்த 16 ஆம் திகதி கையளிக்கப்பட்டது.

சேவா லங்காவின் நிதி உதவியுடன் தமிழீழ நிர்வாக சேவையின் ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கை நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளே கையளிக்கப்பட்டன. இதன் ஒரு தொகுதியான 60 வீடுகள் கடந்த 5 ஆம் திகதி கையளிக்கப்பட்டன.

இவ்வீடுகள் அனைத்தும் சீமெந்துசுவர் வைக்கப்பட்டு கிடுகினால் வேயப்பட்டுள்ளன.

கையளிப்பு நிகழ்வில் முல்லை.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செ.முகுந்தன், கடற்புலிகளின் முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மா.ரங்கன் தமிழீழ நிர்வாக சேவையின் ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கை நிறுவனப் பொறுப்பாளர் சுட்டா, .த.பு.க முல்லை. மாவட்ட இணைப்பாளர் திரு. மூர்த்தி, கிராம அலுவலர் ஆகியோர் கலந்துகொண்டு வீடுகளைக் கையளித்ததுடன் உடனடிப் பொருட்களுக்கு ரூபா ஆயிரத்தினை செயலணிக் குழுவினரும், பொருட்களை த.பு.கழகத்தினரும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# முள்ளியவளை வைத்தியசாலையின் நீர்த்தாங்கி திருட்டு

(முள்ளியவளை)

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில் உள்ள சிறிய பிளாஸ்ரிக் நீர்த்தாங்கி களவாடப்பட்டுள்ளது.

மேற்படி வைத்தியசாலையின் மகப்பேற்று மனையின் பாவனைக்காக பயன்படுத்தப்பட்ட மேற்படி நீர்த்தாங்கி கடந்தவாரம் இரவு களவாடப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வைத்திய அதிகாரி இராசதுரை தெரிவித்துள்ளார். (ஆ)

## தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் 120 பேர் இரத்த தானம் வழங்கினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில் நுட்பக் கல்லூரியில் பயின்று வரும் 70 மாணவர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு இரத்ததானம் வழங்கியுள்ளனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் சிகிச்சைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே கடந்த வாரம் இந்த 70 பேரும் இரத்ததானம் செய்தனர்.

இதே வேளை கடந்த மாதம் ஏற்கனவே 50 உயர் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் சுனாமியினால் பாதிக்கப்பட்ட உறவுகளின் சிகிச்சைத் தேவைகளுக்கென இரத்ததானம் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது (33)

## வெப்பத் தொற்று நோய் பரவுகின்றது; உடனடி நடவடிக்கை வேண்டும்

-பொது மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தற்போது காணப்படும் கடும் வெப்பமான காலநிலை காரணமாக தீவகம் தென்மராட்சி போன்ற பிரதேச மக்களிடையே கண்நோய், வாயவியல், சிரங்கு போன்ற தொற்று நோய்கள் பரவத்தொடங்கியுள்ளன.

எனவே இது குறித்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு யாழ் குடா நாட்டு மக்கள் சம்பந்தப்பட்டோரிடம் கோரியுள்ளனர். (33)

## யாழ்ப்பாணக் குடாநாட்டில் பிரமாண்டமான பேரணிக்கு ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்டத்தில் பிரமாண்டமான பேரணி ஒன்றினை நடத்துவதற்கு யாழ். மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது எதிர்வரும் புதன்கிழமை இப் பேரணி நடத்தப்படும்.**

ஏழு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து இப்பேரணி நடாத்தப்படும் அவையாவன?

போர் நிறுத்தத்தின் பின்பும் அரசியல் பணிக்காக நிராயுத பாணிகளான தமிழீழ விடுதலைப்புலிகள் மீதும், நாட்டுப் பற்றாளர்கள் மீதும் சிறிலங்கா அரசினாலும், தேச விரோத கும்பல்களாலும் மேற்கொள்ளப்படும் அரசியல் படுகொலைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

போரின் அழிவுகளையும், சுனாமிப் பாதிப்புக்களையும் நேரடியாகப் பார்வையிட்டு ஆறுதல கூறுகின்ற சர்வதேச அமைப்புக்களையும் அரச தலைவர்களையும் திட்டமிட்ட வகையில் வட கிழக்குப் பிரதேசத்திற்கு செல்வதற்கு சிறிலங்கா அரசு தடை விதிப்பையும் கண்டித்தும்.

தமிழ் மக்களின் ஏக பிரதி நிதிகளாக தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வடகிழக்கிற்கான இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை உடன் வழங்க வேண்டும்.

இயல்பு வாழ்க்கைக்கு தடையாகவுள்ள காரணிகளை அகற்றி உரிய சூழ்நிலையைத் தோற்றுவிக்க வேண்டும்.

வடக்கு-கிழக்கு பகுதிகளிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி புலம் பெயர்ந்து வாழும் மக்களை சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்துதல் வேண்டும்.

சிறிலங்கா அரசினால் திணிக்கப்பட்ட போர் [illegible] இயற்கையின் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்கு தமிழ் மக்களின் புனர்வாழ்வு, புனர் நிர்மாணத்திற்கும் மனித நேய பணிகளுக்காக அரச, சர்வதேசத்தினால் வழங்கப்பட்ட நிதி மற்றும் உதவிகளில் காட்டப்படும் பாராபட்சம்.

தமிழ் கடற்பரப்பில் எதுவித கட்டுப்பாடுமின்றி சுதந்திரமாக ஆழ்கடல் தொழிலில் ஈடுபட எந்தத் தடைகளும் ஏற்படாத பாதுகாப்பு எமது கடற் றொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். (33)

### நாடகப் பயிற்சிக்கு விண்ணப்பிக்குக

யாழ். திருமறைக் கலா மன்றத்தால் வருடாந்தம் நடத்தப்படும் நாடகப் பயிற்சி நெறியில் புதிய பயிலுனர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எனவே இத்துறையில் ஆர்வமுள்ள ஆண், பெண் இரு பாலரும் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## மணற்காட்டில் மீன்பிடி வள்ளங்கள் கையளிப்பு

(வடமராட்சி)

சுனாமி ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு ஜெர்மன் சமஷ்டி குடியரசின் நிதியுதவியுடன் மணற்காடு கடற் றொழிலாளர்களின் சம்மேளனத் தலைவர் தவரட்ணம் தலைமையில் மீன் பிடி வள்ளங்கள் கையளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது

மணற்காடு பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பதினைந்து மீனவ குடும்பங்களுக்கு இவை வழங்கப்பட்டன. (கா)

*—தென்மராட்சி வலயத்தில்—*

## தமிழ்த்தின போட்டிக்கு தயாராகுக வலயக்கல்விப் பணிமனை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மட்ட தமிழ்த்தினப் போட்டிகளுக்கு மாணவர்களை தயார்படுத்துமாறு தென்மராட்சி வலயக்கல்விப் பணிமனை தென்மராட்சி கல்வி வலயப் பாட சாலைகளுக்கு அறிவித்துள்ளது.

இத்தயார்ப் படுத்தலுக்கான விபரங்களை மேற்படி கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் அதிபர்கள் தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## சுனாமியால் பாதித்த மாணவர்களுக்கு; சுண்டுக்குழி மகளிர் கல்லூரி உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுண்டுக்குழி மகளிர் கல்லூரிச் சமூகத்தினால் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பிரதேச மாணவர்களுக்கு ஒரு தொகுதி விளையாட்டுப் பொருட்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வல்வை சிவகுரு வித்தியாசாலைக்கு இவ் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இப்பாடசாலை மாணவர்களது நலனைக் கருத்தில் கொண்டே இவை வழங்கப்பட்டுள்ளன. (33)

## வள்ளங்கள் புனரமைப்புத் தொழிற்சாலை; பொலிகண்டியில் திறந்து வைப்பு

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை பொலிகண்டிப் பகுதியில் நேற்று முன்தினம் மீன்பிடி வள்ளங்கள் மீள் புனரமைப்பு தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும் பருத்தித்துறை முனை, மாதகல், பொலிகண்டி போன்ற பிரதேசங்களில் முன்னர் திறந்து வைக்க ப்பட்ட இத் தொழிற்சாலையானது மணற்காடு, வல்வை ஆதிகோவிலடி, முல்லைத்தீவு, போன்ற பிரதேசங்களில் திறந்து வைக்கப்படவுள்ளதுடன் மட்டக்களப்பு வாகரையில் இதற்கான ஆரம்ப வேலைகள் இடம் பெற்று வருவதாகவும் தெரிவிக் கப்படுகின்றது. (கா)

### நலன்புரி முகாம் இடமாற்றம்

புலோலி மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் அமைந்துள்ள சுனாமி நலன்புரி முகாம் நேற்று முன்தினம் மணற்காடுப் பிரதேசத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இம் முகாம்களில இருந்த நாற்பத்தேழு குடும்பங்களுக்கு தற்காலிக கொட்டகைகள் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. (கா)

## நுண்கலைமாணி கற்கை நெறி திங்கட்கிழமை தேர்வுப் பரீட்சை

யாழ்.பல்கலைக்கழகநுண்கலைமாணி கற்கை நெறிக்கு மாணவர்களை தெரிவு செய்வதற்கான தேர்வுப் பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ். பல்க லைக்கழகத்தின் நுண்கலைப் பீட வளாகத்தில் இடம் பெறவுள்ளது.

இதற்கென தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் யாவரும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் மற்றும் தேசிய அடையாள அட்டை என்ப வற்றுடன் குறித்த நேரத்திற்கு சமுகம் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## வைத்திய அதிகாரி அலுவலகம் கட்டட வேலைகள் முடிகின்றன

சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு அருகாமையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் கட்டட வேலைகள் தற்பொழுது துரித கதியில் இடம் பெற்றுவருகின்றன.

"நீரப்" திட்டத்தின் கீழ் இடம் பெற்றுவரும் இக்கட்டடத்தின் நிர்மாண வேலைகள் அடுத்த வாரத்திற்கு முன் பூர்த்தியடையுமெனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (33)

## நாவற்குழிப் பாலம் புனரமைப்பு: போக்குவரத்து நடைமுறையில் புதிய மாற்றங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலிருந்து கைதடியூடாக கண்டி வீதி வழியே முகமாலை வரை இடம்பெற்று வந்த முகமாலை யாழ்ப்பாணம் பேருந்து மற்றும் போக்குவரத்துச் சேவைகள் நாவற்குழிப் பாலத்தின் திருத்த வேலைகளுக்காக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருப்பதையடுத்து யாழ். நகரிலிருந்து நாவற்குழி வரையும், நாவற்குழியிலிருந்து சாவகச்சேரி வரையிலுமான குறுந்தூர பேருந்து சேவைகளை தனியார் சிற்றூர்திகள் வழங்கி வருகின்றன.

இதே வேளை யாழ்ப்பாணம்-முகமாலைக்கான பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் யாழ் நகரிலிருந்து பருத்தித்துறை வீதியூடாக கோப்பாயைச் சென்றடைந்து அங்கிருந்து கைதடியூடாக முகமாலை நோக்கி நெடுந்தூர சேவைகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (33)

-யாழ். மாவட்டத்தில் மட்டும்-

## 230 பட்டதாரி பயிலுநர்கள் கடமைக்கு செல்ல வில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அரசினால் அண்மையில் அமுல் செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கான அரசதுறை வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பு நியமனங்களைப் பெற்ற 230 பட்டதாரிகள் இது வரை தமக்கான கடமைகளைப் பொறுப்பேற்க முன்வரவில்லை. பட்டதாரிகளில் இருந்து அரசுதுறை வேலை வாய்ப்பு நியமனங்களுக்கான பயிற்சிகளிலும் இவர்கள் பங்குபற்றவில்லை எனவும் தெரிய வருகிறது. (33)

### மெய்வன்மைப் போட்டி

மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி வரும் 26 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்து கொள்வார். (33)

## கோப்பாய் விபத்தில் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இராசவீதியில் உள்ள கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் இடம் பெற்ற உந்துருளி -ஈருருளி விபத்தில் கல்வியங்காட்டைச் சேர்ந்த ந. இராசதுரை (வயது54) என்பவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணிக்கு இடம் பெற்றுள்ளது. இவர் ஓட்டி வந்த ஈருருளியும் முற்றாகச் சேதமடைந்தது. (33)

### மென்பந்து துடுப்பாட்ட போட்டி

கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான மென்பந்துத் துடுப்பாட்ட சுற்றுப் போட்டி நேற்றுக் காலை 8.00 மணிக்கு கொலின்ஸ் விளையாட் டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

## உணவு முத்திரை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சுனாமி ஆழிப் பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து தற்போது தென்மராட்சிப் பகுதியில் தற்காலிகமாக தங்கியிருப்போருக்கான 2 ஆம் கட்ட உணவு முத்திரைகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

எனவே பாதிக்கப்பட்டவர்கள் உரிய அதிகாரிகளூடாக தமது 2 ஆம் கட்ட நிவாரணத்திற்கான உணவு முத்திரைகளை பெறலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# அரசாங்கம் சுனாமியைத் தனது சொந்த உடமையாகக் கருதி செயலாற்றுகிறது

சுனாமி பேரலையினால் ஏற்பட்டுள்ள உயிர் இழப்புக்கள், உடமை இழப்புக்கள் என்பவற்றுக்கு முறையாகப் பரிகாரம் தேடுவதில் தற்போதைய அரச இயந்திரம் முறையாக இயங்குவதற்கு முடியாது உள்ளமையால் சுனாமி அரசியல் இப்பொழுது வீசத்தொடங் கியுள்ளது.

அரசியல் சுனாமி என்பதின் அர்த்தம் என்னவென்றால் பொதுமக்கள் தற்பொழுது அரசுக்கோ அல்லது அரசியல் கட்சி களுக்கோ தமது ஆதரவை விலக்கிக் கொண்டு வருவதன் பலனாக நாட்டின் அரசியல் பீடம் சரியும் அறிகுறிகள் தென்படுகின்றன. சுனாமியின் போது இந்நாட்டில் பல்லாயிரக்கணக்கானோர் பேரழிவுகளைச் சந்தித்துள்ளனர். ஆனபடி யால் அரசுக்கு அரசியல் கட்சி ஆதர வாளர்களுக்கும் நிவாரணம் பங்கிடுவ தற்காக அரசாங்கம் இவற்றை மட்டுப்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இருபது வருட யுத்தத்தினால் ஏற்பட் டுள்ள அழிவுகளை விட சுனாமி யுத்தம் ஒரேநாளில் ஒருமணித்தியாலயத்தில் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்துடமைகளையும் பல்லாயிரக் கணக்கான உயிர் இழப்புக்களையும் ஏற்படுத்தி விட்டுச் சென்றுள்ளது. ஒரே நாளில் 50 ஆயிரம் பொதுமக்களை இந்த சுனாமி யுத்தம் பலி எடுத்துள்ளது. பத்து இலட்சத்திற்கு மேற்பட்டோரை இடம் பெயரவைத்துள்ளது. முதலாவது அழிவு மனிதனால் ஏற்படுத்தப்பட்டது. அதாவது யுத்த அனர்த்தங்களால், இரண்டாவது கடல் கொந்தளிப்பு இயற்கையின் பேரழிவு சுனாமிப் பேரழிவினால் நாட்டின் இனப் பிரச்சினை தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டுள்ளது. சுனாமி இடிபாடுகளை அகற்றும் பொழுது இந்த இடிபாடுகளில் இருந்து அரசியல் தீப்பொறிகள் மறைவிடங்களில் இருந்து பறக்கலாம்.

சுனாமிப் பேரலைகளுக்கு முன் இனப்பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முடியாமலும் நாட்டின் அன்றாடப்பிரச்சினை களைத் தீர்க்க முடியாமலும் அரச இயந்திரம் இயங்க முடியாத நிலையில் இருந்தது. இது அரசியல் நிலைப்பாடு. அரசாங்கம் அரசியல் நடத்தும் ஸ்தீரமற்ற தன்மையில் இருந்தது. அரசாங்கமும் எதிர்க்கட்சியும் ஒன்றை ஒன்று விழுங்கும் நிலைப்பாட்டில் இருந்தன.

தற்பொழுது ஏற்பட்டுள்ள அழிவுகள் மிகப்பெரிதாக இருந்தாலும் அரசியல் கட்சிகள் இதை உணர்ந்தபாடில்லை. இவர்களின் அரசியலில் எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை. நாட்டை மீளக்கட்டி யெழுப்புவோம் என அரசாங்கமும் எதிர்க் கட்சிகளும் சேவல் போல் கொக்கரித்தாலும் நாட்டைக் கட்டி எழுப்புவதில் எவருக்கும் அக்கறை கிடையாது. பொதுவாக அரசாங்கம் சுனாமியைத் தனது சொந்த உடமையாகக் கருதி தற்பொழுது செய லாற்றி வருகின்றது. இந்தப் பேரழிவுகள் ஏற்பட்டுள்ள வேளையிலும் சனாதிபதி அவர்கள் மீண்டும் தனது பதவியைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் ஆட்சியை நீடிப்பது என்ற குறிக்கோளில் இருந்து முற்றாக மாறவில்லை. அவரின் செயற் பாடுகள் அப்படியே நடந்தவண்ணமுள்ளன. எதிர்க்கட்சியும் தமது நிலைப்பாட்டில் இருந்து மாறவில்லை.



தீர்க்கதரிசன அரசியல் பிரபு வர்க்கத்தினர் நாட்டை எப்படி மீளக்கட்டியெழுப்புவது, வீழ்ச்சி அடைந்துள்ள பொருளாதார கட்டமைப்பைக் கட்டியெழுப்புவது என்ற சிந்தனையுடன் இதய சுத்தியுடன் இந்த நாட்டில் சகல மக்களும் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் ஒன்றிணைந்து ஒரு பொது நிலைப்பாட்டை ஏற்படுத்த வேண்டும். சுனாமிப்பேரழிவையும், யுத்தத்தினால் நாட்டில் ஏற்பட்ட அழிவுகளையும் ஒன்றி ணைத்து நாட்டில் இடம்பெயர்ந்துள்ள சகல மக்களுக்கும் வீடுகளை அமைத்து அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்து வதற்குப் பொதுவான ஒரு செயற் திட்டத்தைக் கட்டியெழுப்ப முன்வரவேண்டும். இவற்றைச் செயற்படுத்துவதற்கு எதிர்க்கட்சியும் அரசாங்கமும் இதுவரை முன்வரவில்லை.

இப்படியானதொரு திட்டத்தை முன் வைக்கவும் இல்லை. அவர்கள் தம்மிச் சைப்படியே செயற்பட்டு வருகின்றனர். சுனாமிப் பேரலை அழிவுகளுக்கு முகம்கொடுத்துள்ள மக்களுக்கு அரசாங்கம் முன்வைத்துள்ள வேலைத்திட்டங்களை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த வேலைத்திட்டங்களினால் மக்கள் மேலும் குழப்பமடைந்துள்ளார்கள். இதனால் மக்களுக்கு கட்சிகளில் இருந்த பற்று தற்பொழுது மிகவும் குறைந்து வருகின்றது. இப்பொழுது மக்களை மாட்டு மந்தைக் கூட்டம் என்று அரசியல்வாதிகள் தப்புக்கணக்குப் போடமுடியாது. மக்கள் தற்பொழுது விழிப்படைந்துள்ளார்கள். எதிர்காலத்தில் நாட்டை மீளக்கட்டியெழுப்ப வேண்டுமானால் மக்கள் எல்லோரும் மாட்டு மந்தைகள் இவர்களைத் தமக்கு வேண்டிய திசைகளில் விரட்ட முடியுமென எண்ணாமல் தமது அரசியல் பலவீனங்களைச் சரிசெய்து பிழையான அணுகுமுறையைக் கைவிட்டு புதிய அரசியல் சகாப்தத்தை உண்டு பண்ணி மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியலை ஏற்படுத்துவதற்குச்சகல அரசியல் வாதிகளுக்கும் சுனாமி அரசியல் ஒரு நல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

ராவய சிங்கள நாளிதழ்
விக்டர் ஐவன்
மொழியாக்கம் - அ.சக்திவேல்

இன்று நாடு முகம் கொடுத்துள்ள சவால்களை வெற்றி கொள்வதற்கு அரசாங்கத்தால் முடியாது சுனாமிப்பேரழி வினால் உடமைகளையும் உயிர்களையும் இழந்தவர்களின் எண்ணிக்கை 10 இலட்சத்தையும் தாண்டியுள்ளது. இருபது வருடகால கொடூரயுத்தத்திற்குத் தீர்க்கமான முடிவுகள் இன்றும் எட்டப்படவில்லை. விரைவில் அல்லது மெதுவாகவோ யுத்தம் ஆரம்பமாகும் சூழ்நிலையில் நாடு தற்பொழுது உள்ளது. அரசாங்க இயந்திரத்தின் செயற்பாடு மிகவும் குறைந்துள்ளது. சட்டம் ஒரு இருட்டறை யாகிவிட்டது. சுகாதாரம், கல்வி, போக்கு வரத்துக்கள் எந்த நேரத்திலும் வீழ்ச்சி அடையலாம். சகல அரசாங்க நிர்வாகமும் ஊழல் மோசடிகள் நிறைந்து காணப்படுகின்றன. இது நீடித்துக் கொண்டே போகின்றது. பாதிக்கப்பட்டவர்களின் நலன்கள் யாவும் சீர் செய்யப்படவில்லை. சுனாமிப்பேரலைகள் ஏற்பட்டு இரண்டு மாதங்கள் ஆகின்ற நிலையிலும் பலருக்கும் இன்னும் நிவாரணங்கள் வந்து சேரவில்லை என அரச எதிர்ப்புக் கோசங்கள் நாடு முழுவதிலும் ஏற்பட்டு வருகின்றன. ஆனபடியால் மக்கள் இப்பொழுது கட்சிகளின் செயற்பாடுகளை வெறுக்கத் தொடங்கியுள்ளனர். அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களினால் அரசுக்கும் மக்களுக்கும் இடையில் பெரும் இடைவெளிகள் ஏற்பட்டுள்ளன. எதிர்க் கட்சியினால் மக்களுக்கு நல்ல வேலைத் திட்டங்களை முன்வைக்க முடியாதபடியால் அக்கட்சியின் செல்வாக்கு மிகவும் குறைந்துள்ளது. பாதிக்கப்பட்ட மக்களி டமிருந்து அரசாங்கத்திற்கு இப்பொழுது பெரும் எதிர்ப்புக்கிளம்பியுள்ளது. சுனாமிப் பேரழிவினால் அரசியல் தளம் மிக மோசமாகப் பாதிக்கப்படும் நிலை ஏற்பட் டுள்ளது. ஆகவே அரசாங்கம் இதனை முழுமையாக ஆராய்ந்து கட்சிப்பேதங்களை அரசியல் பழிவாங்கல்களைத் தவிர்த்து கொண்டு இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சிறந்த அரசியல் தீர்வை ஏற்படுத்தினால், மீண்டும் இந்நாட்டை நல்லதொரு நிலைக்குக் கட்டியெழுப்ப முடியும். தற்பொழுது வடகிழக்கு மக்கள் உட்பட சகல மக்களையும் ஒன்றிணைத்து அவர்களையும் இந்த வேலைத்திட்டத்தில் பங்காளிகளாக்கி இந்த நாட்டின் அரசியலில் புதிய யுகத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வந்தால் இந்த நாட்டைச் சீரழிவில் இருந்து மீண்டும் கட்டியெழுப்பமுடியும்.

# சமாதானத்தை மலரச் செய்ய மக்களின் அழுத்தம் அவசியம்

## கொழும்பில் எரிக்சூல்ஹெய்ம்

(கொழும்பு)

இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்கு அரசியல் தலைவர் கள் முன்னின்று செயற்பட வேண்டுமென நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

சமாதானத்தை மலரச்செய்வ தற்கு மக்களின் உந்துசக்தி மற்றும் அழுத்தங்கள் அவசியமாகுமென வும். சமாதானத்தை விரும்பும் இலங்கையர்களின் ஒத்துழைப்பு இன்றி அரசியல் கட்சிகளின் தலைவர்களோ விடுதலைப் புலிகளோ இந்த இலக்கை அடைய முடியாது எனவும் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவ மொன்றில் தெரிவித்தார். போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத் திடப்பட்டு மூன்று வருடங்கள் பூர்த்தியாவ தைத் முன்னிட்டு கொழும்பு புதிய மண்டபத்தில் இவ் வைபவம் நடைபெற்றது. தேசிய சமாதான சபையின் சிவில் அமைப்புக்களும் இணைந்து ஏற்பாடு செய்த இவ் வைபவத்தில் அரசியல் கட்சிகளைச்சேர்ந்த பிரதிநிதிகள், வெளிநாட்டுத்தூதரக அதிகாரிகள், மதத்தலைவர்கள், சிவில் சமூகப்பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## - மன்னார் நெல் வயல்களில் -
# கபிலநிற தத்தியின் தாக்கத்தை கட்டுப்படுத்த ஆலோசனை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நெல்வயல்களில் கபிலநிற தத்திகளின் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் பல விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்தத்தாக்கத்தினால் நெற்பயிர்கள் ஆங்காங்கே எரிந்தும் பயிரின் அடிப்பகுதியில் பூச்சிகள் இருப்பதையும் காணமுடிகின்றது. இது சம்பந்தமாக மன்னார் விவசாயத்திணைக்களம் சகல விவசாயிகளுக்கும் விடுத்துள்ள அறிவித்தலில் பாதிக்கப்பட்ட நெல் வயலுக்குள் இருக்கும் நீரை உடனடியாக வெளியேற்றி தகுந்த சிபார்சு செய்யப்பட்ட கிருமி நாசினிகளை விசிறுமாறும் முக்கியமாக நைதரசன் பசளை பாவித்தலைத் தவிர்க்குமாறும் வேண்டியுள்ளது. இந்த விடயம் தொடர்பாக தற்சமயம் மன்னார் விவசாயத் திணைக்களம் மன்னார் நகருக்குள் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்து வருகின்றது. (18)

## திருமலை கச்சேரி களஞ்சியத்திலிருந்து
# 12 மின் பிறப்பாக்கிகள் மாயமாக மறைந்தன
## - திருமலை பொலிசார் விசாரணை

(திருமலை)

திருகோணமலை கச்சேரியிலுள்ள காணி பதிவாளர் அலுவலகத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த 12 மின் பிறப்பாக்கிகள் மர்மமான முறையில் காணாமற் போயுள்ளன.

சுனாமி நிவாரண உதவித் திட்டத்தின் கீழ் இவை இந்தியாவினால் மின் விநியோகத்திற்காக அன்பளிப்பு செய்யப்பட்டிருந்தன.

கடந்த வெள்ளிக்கிழமை களஞ்சியத்தில் நிவாரணப் பொருட்கள் கணக்கெடுக்கப்பட்ட போது குறிப்பிட்ட 12மின் பிறப்பாக்கிகளும் அங்கிருந்ததாகவும், நேற்று களஞ்சியம் திறந்து பார்க்கப்பட்ட போது மர்மமான முறையில் அவை காணாமல் போயுள்ளமை தெரிய வந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக திருகோணமலை பொலிசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# அக்கராயன் வைத்தியசாலையில் சனவரி மாதம் 4607 பேர் சிகிச்சை

(அக்கராயன்)

அக்கராயன் வைத்தியசாலையில் இவ்வருடம் சனவரி மாதம் 4607 பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

சாதாரண காய்ச்சல் காரணமாக 772 பேரும், மலேரியா காய்ச்சலிற்கு 77 பேரும், வாந்திபேதியிற்கு 43 பேரும், விசர்நாய்க்கடிக்கான சிகிச்சையினை 26 பேரும், சாதாரண நாய்க்கடிக்கான சிகிச்சையினை 48 பேரும், விபத்துக்காயங்களிற்கான சிகிச்சையினை 375 பேரும் பெற்றுள்ளனர் என வைத்தியசாலையின் புள்ளிவிபர அறிக்கையூடாக அறியமுடிகிறது. (15, 07)

**– கௌசல்யன் உள்ளிட்டோர் கொலை தொடர்பில் –**

# வெலிக்கந்த,புனானை படை அதிகாரிகளை சனாதிபதி பதவியிலிருந்து நீக்கவேண்டும்

**– அமெரிக்காவிலுள்ள புலம் பெயர்ந்தோர் தமிழ் அமைப்புகள் கோரல்**

**கிழக்கில் அண்மையில் இடம் பெற்ற மட்டு-அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளரும் ஏனைய விடுதலைப்புலிகளினதும் கொலைச் சம்பவத்தைக் கண்டித்தும் இது போன்ற செயற்பாடுகள் எதிர்காலத்தில் இடம் பெறாதிருக்கவும் உடனடியாக இச்சம்பவம் நடைபெற்ற இடமாகிய வெலிக்கந்த, புனானை இராணுவப் பொறுப்பதிகாரிகளை சேவையிலிருந்து இடை நிறுத்தி வைக்குமாறும் அமெரிக்காவிலுள்ள புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புக்கள் சிறிலங்கா சனாதிபதியைக் கோரியுள்ளன.**

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; நாம் மட்டு- அம்பாறை அரசியல் துறைப்பொறுப்பாளரும் கிழக்கின் சுனாமி நிவாரண இணைப்பாளருமாகிய கௌசல்யன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு, ஏனைய மூன்று அரசியல் செயற்பாட்டாளர்களினதும் கொலை தொடர்பாக கோபமும், கவலையுமடைந்துள்ளோம் இப்படுகொலை சுனாமியினால் ஏற்பட்ட இன,மத,பால் வேறுபாடின்றி சமுதாயத்தில் ஒத்துப் போகின்ற தன்மை என்ற நம்பிக்கையை அழிக்கின்ற வகையாகவுள்ளது. சுனாமி நிவாரண நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடலை முடித்துக் கொண்டு திரும்பிய கௌசல்யன் குழுவினர் மீதான தாக்குதல் மிகவும் வெறுக்கத்தக்கதாகவுள்ளது.

இக்கொலைச் சம்பவத்திற்கு ஐ.நா செயலர் கொபிஅனான் , ஜப்பானியத் தூதர் யசுசி அகாஷியுடன் இணைந்து அனுதாபம் தெரிவிக்கின்றோம். இச்சம்பவம் சிறிலங்கா அரச கட்டுப்பாட்டு பகுதியில், விசேடமாக வெலிக்கந்த, புனானைச் சோதனைச் சாவடிகளிற்கிடையில் நடைபெற்றுள்ளது. கௌசல்யனும் ஏனையோரும் ஆயுதமற்று குறிப்பிட்ட வாகனத்தில் அக்குறிப்பிட்ட நேரத்தில் பயணம் செய்கின்ற உண்மை சிறிலங்காவின் இராணுவத்தினரின் வெலிக்கந்தைச் சோதனைச் சாவடியினரிற்கே தெரியும். அங்கே அவர்கள் தமது பெயரையும் வாகனத்தையும் பதிவுசெய்துள்ளனர். சம்பவத்தில் ஒருவர் தப்பியுள்ளதுடன் கொலையாளிகள் இராணுவ சீருடை அணிந்திருந்ததாகவும் தெரிவித்திருக்கின்றார். எனவே இம் மனிதநேயமற்ற செயலை சிறிலங்கா இராணுவத்தினர் கண்டும் காணாதிருந்துள்ளனர். போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்வதற்கு அரசு, அரச கட்டுப்பாட்[illegible]பிரதேசத்திற்கு பயணம் செ[illegible]புத மற்ற விடுதலைப்புலி[illegible]க்கு சட்ட ரீதியாக பாதுகாப்பு அழிக்கும் உரிமையைக் கொண்டுள்ளது. இவ்வாறான வெளிப்படையான தாக்குதல்கள் நடக்க முடியுமானால் போர்நிறுத்த உடன்படிக்கை கேள்விக்குறியாகும். இச்சம்பவம் ஒரு போர் நிறுத்த மீறலாகும்.

எனவே இது போன்று எதிர் காலத்தில் இடம் பெறாதிருக்க நடவடிக்கை எடுக்க அரசைக் கோருகின்றோம். இச்சம்பவம் தொடர்பாக சிறிலங்கா அரசின் கவனத்திற்கு இஸ்ரேலிய குடியிருப்பினர் மீது மேற்குக் கரையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலிற்கு பிரதமர் அப்பாஸ் யாரையும் குற்றம் சாட்டாது அல்லது விசாரணைக்குக் காத்திராது உடனடியாக பொறுப்பாகவிருந்த பாதுகாப்பு அதிகாரிகளை வேலையிலிருந்து இடை நிறுத்தியதைச் சுட்டிக்காட்டுகின்றோம் எனவே நாம் சனாதிபதியை வெலிக்கந்தை, புனானை இராணுவ முகாம்களிற்கு பொறுப்பாக இருந்தவர்களை உடனடியாக இடை நிறுத்தக் கோருகின்றோம். இது நியாய சம்பந்தமானது மட்டுமல்லாமல், அரசியல் சம்பந்தமானது. சுனாமியால் பாதிப்படைந்தவர்களிற்கு நிவாரண நடவடிக் கையை மேற்கொள்வதற்கும் விடுதலைப் புலிகளிற்கும், அரசிற்கும் இடையில் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற் கும் ஏற்ற சூழலை ஏற்படுத்த ஒரு நல்ல சந்தர்ப்பம் இதுவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நோர்வே விசேட தூதுவர் கல்முனைக்கு விஜயம்

கொழும்பில் தங்கியிருக்கும் விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் எதிர்வரும் சனிக்கிழமை அம்பாறை மாவட்டம் கல்முனைப் பிரதேசத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவதற்காக இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். எதிர்வரும் வெள்ளிக்கிழமை தென்மாகாணத்தில் சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட அழிவுகளைப் பார்வையிடுவதற்காக இவர் அங்கு செல்லவுள்ளார்.

## எஸ்.பியை சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றும் உத்தரவு நிராகரிப்பு

(கொழும்பு)

முதுகில் ஏற்பட்ட வருத்தம் காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் எஸ்.பி திஸாநாயக்கவை சிறையிலுள்ள வைத்தியசாலைக்கு மாற்றுமாறு சிறைச்சாலை அதிகாரிகள் விடுத்த கோரிக்கையை அவரது வைத்திய நிபுணர் வசந்தபெரேரா நிராகரித்துள்ளார்.

சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதி வரை அவருக்கு கிரமமான மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட வேண்டியிருப்பதால் அதற்கு முன் அவரை வைத்தியசாலையிலிருந்து வெளியேற்ற முடியாதிருப்பதாக தெரிவித்துள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. எஸ்.பி திஸாநாயக்கா கொழும்பு வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சைபெறுவதாயின் அவருக்கு பாதுகாப்பளிப்பது சிரமம் என சிறைச்சாலை அதிகாரிகள் முன்னர் அறிவித்தனர்.

எனினும் வைத்தியர் வசந்த பெரேராவின் இந்த மறுப்பையடுத்து திஸாநாயக்காவுக்கு சிறைச்சாலை அதிகாரிகள் பாதுகாப்பு வழங்குவதாகவும் இதற்கும் மேலாக பொலிசாரின் பாதுகாப்பும் பெற்றுக்கொடுக் கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது..

## கல்வித்துறையில் ஏற்படவுள்ள மாற்றம் குறித்து சனாதிபதியுடன் பேச ஜே.வி.பி. முடிவு

(கொழும்பு)

நாட்டில் கல்வித்துறையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த அரசு முயன்று வருவதால் அது தொடர்பாக வரும் 28ஆம் திகதி சனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துப் பேச்சு நடத்த ஜே.வி.பி யினர் தீர்மானித்துள்ளனர்.

இதன்போது கல்விச்சேவையைத் தனியார் மயப்படுத்தல், தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்க அனுமதியளித்தல், க.பொ.த. உயர்தரப்பரீட்சைக்கு 2 பாடங்களைக் கட்டாயப்பாடமாக்குதல் போன்ற அரசின் தீர்மானம் பற்றிப்பேசவே ஜே.வி.பி. எதிர்பார்த்திருப்பதாகக் கூறப்படுகிறது. நேற்று முன்தினம் பாராளுமன்ற வளாகத்தில் கூடிய ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த முடிவை எடுத்தனர்.

## ஆயுர் வேத வைத்தியசாலையை ஆயுர் வேத திணைக்களத்தின் கீழ் கொண்டு வருக

(கொழும்பு)

கம்பகா விக்ரமாராச்சி ஆயுர் வேத வைத்தியசாலையை ஆயுர்வேதத் திணைக்களத்தின் கீழ் கொண்டு வர வேண்டுமென அகில இலங்கைச் சுகாதார சேவை சங்கத்தினர் கடித மூலம் பிரதிக் கல்வியமைச்சர் தினேஸ் குணவர்த்தனாவைக் கேட்டுள்ளார்.

அக் கடிதத்தில் வைத்தியர்கள், வைத்தியசாலை ஊழியர்கள் ஆகியோரின் சேவை நிலைகள் களனி பல்கலைக்கழக அதிகாரத்தின் கீழ் ஸ்திரமற்ற நிலையிலுள்ளது. விக்ரமாராச்சி வைத்தியசாலையின் ஒழுங்கற்ற நிர்வாகம் களனி பல்கலைக்கழக ஆயுர்வேதப் பீடத்தின் கற்கைகளிற்கு தீங்கு விளைவிப்பதோடு வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகளிற்கு போதியளவு வைத்திய வசதிகளையும் வழங்க முடியாதுள்ளது எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுதேச மருந்துவத்திற்கான அமைச்சர் திசாகறல்லிஜெடா, சங்கத்துடனான கலந்துரையாடலில் ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் இவ் வைத்தியசாலையைக் கொண்டு வர உடன்பட்டதாகவும் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர். அத்துடன் இந் நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படாவிட்டால் தாம் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

## தமிழரின் பிரிந்து செல்லும் தகுதியை உலக சமூகம் ஏற்கவேண்டும்

**- அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு கோரிக்கை**

சிறிலங்கா அரசு தமிழ்மக்களின் நியாயபூர்வமான உரிமைகளை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றது என்பதுவே மூன்று வருடகால போர் நிறுத்த உடன்பாடு நிரூபிக்கும் செய்தி இதுவென அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு நேற்று முன்தினம் போர் நிறுத்த உடன்பாடு நான்காவது ஆண்டை எட்டுவது தொடர்பாக வெளியிட்ட செய்தியில் தெரிவித்துள்ளது.

சிங்கள அமைப்பின் இந்த உரிமை மறுப்பு நிலையை கருத்தில் எடுத்து, சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தமிழ் மக்கள் பிரிந்து செல்லும் உரிமையைப் பிரயோகிக்கும் தகைமையைக் கொண்டவர்கள் என்பதை உலக சமூகம் பகிரங்கமாக ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும் அனைத்துலக தமிழர் கூட்டமைப்புக் கோரியுள்ளது.

கடந்த மூன்று வருட போர் நிறுத்த காலகட்டத்தில் தமிழ்மக்களின் வாழ்நிலையில் எதுவித குறிப்பிடத்தக்க மாற்றங்களும் இடம்பெறவில்லை. அவர்களுக்கான பொருளாதார சமூக உரிமைகள் மறுக்கப்பட்டே வருகின்றன. அவர்களிற்கான இடைக்கால அரச கட்டமைப்புக்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. சிறுவர்கள், பெணகள் உட்பட பாதிக்கப்பட்ட சமூகத்தின் பலதரப்பும் தொடர்ந்தும் துன்பத்தில் வாழ்ந்து வருகின்றது.

மறுபுறம், புலிகளுக்கும், புத்திஜீவிகள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கும் எதிரான படுகொலை நடவடிக்கைகள் தொடர்ந்து இடம் பெற்றுவருகின்றன. இதில் இராணுவத்தின் பங்கு மறுக்க முடியாத விதத்தில் வெளிப்படையானதாகவுள்ளது.

போர் நிறுத்த உடன்பாடு மற்றும் இணக்கப் பேச்சுக்களின் பங்காளர்களான புலிகளை இன்றைய சிறிலங்கா அரசு ஓரம்தள்ளும் இராஜதந்திர - இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றதென்பதும் வெளிப்படையானது.

கடந்த டிசம்பரில் ஏற்பட்ட சுனாமி பேரழிவுகளின் போது கூட இத்தகைய புறம்தள்ளும் நடவடிக்கைகளில் சிறிலங்கா ஈடுபட்டுவந்துள்ளது.

கடந்த நவம்பரில் தமிழீழ தேசியத்தலைவர் மேதகு.வே.பிரபாகரன் அவர்கள் இந்த இனவாதக் கடும் போக்கை சுட்டிக்காட்டி, இந்த நிலையில் மாற்றம் காணப்படாதவிடத்தில் தமிழ் மக்கள் பிரிந்து சென்று தனிநாடு அமைக்கும் உரிமை கொண்டவர்கள் என்பதைப் பிரகடனப்படுத்தியிருந்தார்.

இந்தப் பின்னணியில் உலக சமூகம் தமிழ்மக்களின் வாழ்நிலை கடினங்களையும், சிங்கள அமைப்பின் உரிமை மறுப்பு நிலையையும் பகிரங்கமாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழும் தமிழ் மக்கள் சார்பில் வேண்டுதல் விடுத்துள்ள அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு தமிழ் மக்கள் பிரிந்து செல்லும் தமது உரிமையைப் பிரயோகிக்கும தகைமையைக் இன்று கொண்டவர்கள் என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும் வேண்டியுள்ளது.

கடந்த மூன்றாண்டுகளாக இலங்கைத்தீவில் இடம்பெறும் போர் நிறுத்த உடன்பாடு தொடர்பாகவும், ஐந்து ஆண்டுகளாக தொடரும் சர்வதேச இணக்க முயற்சிகள் தொடர்பாகவும் சிறிலங்கா சனாதிபதியும், அரசும் கடைப்பிடித்த நிலைப்பாடுகள் தொடர்பான ஆவணமொன்றை அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு நேற்று முன்தினம் ஜெனீவாவில் வெளியிட்டுள்ளது.

## யுத்த நிறுத்தத்தை இறுக்கமாக நடைமுறைப்படுத்தி பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும்

**-இதுவே கூட்டமைப்பின் முடிவென்கிறார் சம்பந்தன்**

இந்த யுத்த நிறுத்தத்தைக் இறுக்கமாக அல்லது, அதை ஒரு அத்திவாரமாகப் பயன்படுத்துவதன் மூலம் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முடிந்த முடிவாகும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன் கருத்துக் கூறியுள்ளார்.

அப்படியான ஒரு சூழலுக்கு அண்மையிலே ஏற்பட்ட சுனாமி ஒரு நல்ல சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது. இந்தச் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் அவர்களை மீளக்குடியமர்த்துதல் போன்றவற்றை எல்லாம் செயற்படுத்துவதற்கு ஒரு புதிய கட்டமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதனை நாங்கள் வற்புறுத்தி வருகின்றோம்.

இதன் மூலம் இந்த இரண்டு பகுதியினருக்கும் இடையில் இருக்கின்ற தப்பபிப்பிராயம் அதே போன்று அவர்கள் மத்தியிலே இருக்கின்ற சில அபிப்பிராயப் பேதங்களை எல்லாம் ஒழித்து இவர்கள் இருபகுதியினருக்குமிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தி இந்தப்பேச்சுவார்த்தையைத் தொடரக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படுமென்பதை நாங்கள் சகல வெளிநாட்டு தூதுவர்களுக்கும் வெளிநாட்டு தலைவர்களை சந்திக்கும் போதும் கூறி இருக்கின்றோம் என்றார்.

# இல.மக்கள் ஈருருளியில் இருக்கின்றனர் ஓட விசைவழங்காவிட்டால் வீழ்ந்துவிடுவர்

### –சமாதான முயற்சியில் இலங்கை மக்களின் நிலை குறித்து அமெ. தூதுவர்

(கொழும்பு)

இலங்கை மக்கள் ஈருருளியில் இருக்கின்றார்கள் அதற்குரிய விசையை வழங்குவதன் ஊடாகவே அதனை ஓடச் செய்யமுடியும். இல்லாவிட்டால் வீழ்ந்து விடுவர் என இலங்கை மக்களின் தற்போதைய நிலை குறித்து இலங்கையிலுள்ள அமெரிக்கத்தூதுவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் யுத்த நிறுத்த உடன்பாடு மற்றும் சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதை ஒட்டி இலங்கை சமாதானப் பேரவை கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமெரிக்கத்தூதுவர் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், அந்த வகையில் நாம் சமாதான முயற்சிகளுக்கான சகல உதவிகளையும் வழங்க முடியுமாயினும் இந்த நாட்டு மக்களே தமது பிரச்சினைக்குரிய தீர்வைக்காண வேண்டும் என்றார்.சமாதானத் தீர்வு தொடர்பாக சர்வதேச சமூகம் எந்தத் தீர்வையும் திணிக்கப் போவதில்லையெனவும் பிரச்சினைக்குரிய இருதரப்பும் மனம்திறந்து பேசித்தீர்வு காண்பதற்கு ஒத்துழைப்பை மட்டுமே சர்வதேச நாடுகள் வழங்குகின்றன எனவும் அவர் கூறினார்.இலங்கைப் பிரச்சினையில் எந்தவொரு நாடும் ஆதிக்கம் செலுத்தாது அரசும், விடுதலைப்புலிகளும் நாட்டு மக்களும் மனம் திறந்து பேசித்தீர்வு காண முன்வரவேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

# புலிகளின் இ.த.அதிகாரசபை யோசனையை அடிப்படையாக வைத்துப் பேச அரசு முடிவாம்

### ஜயந்த தனபால கூறுகிறார்

விடுதலைப்புலிகள் முன்வைத்திருக்கும் வட கிழக்குக்கான இடைக்கால தன்னாட்சி அதிகார யோசனையை அடிப்படையாக வைத்து சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக அரசாங்க சமாதானம் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் ஜயந்த தனபால நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு வடக்கு, கிழக்கில் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை ஏற்படுத்திய பின்னரே சமாதானப் பேச்சுக்களைத் தொடரமுடியுமென அறிவித் திருந்தது. ஆனால் அதில் சிக்கல்கள் காணப்பட்டதால் அதனைச் செய்வதில் அரசு தயக்கம் காட்டி வந்தது. எனினும் இவ் விடயத்தை மிக ஆழமாக ஆராய்ந்த பின்னர் சனாதிபதி இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க முடிவு செய்திருக் கின்றார். இதன் பிரகாரம் முதலில் வடக்கு -கிழக்கு இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபை அமைக்கப் படும். அதன் பின்னர் இறுதித் தீர்வை நோக் கிய பேச்சுக்களை ஆரம்பித்து தொடரப் படும். வடக்கு கிழக்கு மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள், பிரச்சினை களை கருத்தில் கொண்டு மனிதாபிமான நோக்கிலேயே அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது.

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடனும் ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கிறது.. அரசாங்கம் யுத்த நிறுத்த உடன்பாடு தொடர வேண்டுமென வாழ்த்து தெரிவித்த துடன், அது குறித்த திருப்தியினையும் தெரிவித்துள்ளது. யுத்த நிறுத்தத்தின் ஊடாகப் பேச்சுக்கு வருவதென்பது இருதரப் பினதும் அடிபணிதல் அல்ல. இருதரப்பு பலத்துடன் உரியவற்றை பேச்சு வார்த்தை மூலம் பெற்றுக் கொள்ளுதல் ஆகும எனவும் ஜயந்ததனபால தெரிவித்துள்ளார்.

இதேவேளை யுத்த நிறுத்த காலத்தில் விடுதலைப்புலிகளும் அரசும் கடைப்பிடித்த பொறுமைக்கு வாழ்த்துத் தெரிவித்த ஜப்பா னின் இலங்கைக்கான தூதுவர் அக்கியுயோசூடா நோர்வேயின் அனுசரணைக்கும் கண்காணிப் புக்கும் நன்றியும் தெரிவித்தார். இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு தமது பூரண ஆதரவும், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பும் முழுமையாக கிடைக்குமெனத் தெரிவித்துள்ள அவர் அனைத்து தரப்பின ரும் சமாதானத்தை ஏற்படுத்த முனைய வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியவர்களுக்குப் பாராட்டு

(வட்டக்கச்சி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வட்டக்கச்சிப் பிரதேசத்தில் உதவியளித்தவர்களைப் பாராட்டி வாழ்த்தும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாவீரர் பொது மண்டபத்தில் தேசிய எழுச்சிப் பேரவை செயலர் பொன்னுத்துரை தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கருத்துரைகளை பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சுடரும், போராளி சோழநிலவனும் இராமநாதபுரம் மகாவித்தியாலய ஆசிரியர் ஜெயகௌரியும் திட்டக்குழுவைச் சேர்ந்த பாஸ்கரனும் போராளி அருளனும் வழங்கினார்கள். (12)


## இடமாற்றம்

இரத்தினம் உந்துருளி உதிரிப் பாக வாணிபம் (இரத்தினாஸ்) யாழ் கண்டிவீதி கிளிநொச்சியில் மக்கள் வங்கிக்கும் சி. க. கூ. சங்கத்திற்கும் இடையில் கமலா ஸ்ரூடியோவிற்கு அருகாமையில் இடமாற்றம் செய்யப் படவுள்ளதை எமது வாடிக்கையாளர்கட்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

(5748)



## பணிநிலை வேண்டுகை

தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆளுகைக்கு உட்பட்ட நிறுவனங்களில் பின்வரும் பணிநிலைகளுக்குத் தகுதி உடையோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### பணிநிலைகள்

1.கணக்காய்வாளர்
2.கணக்காளர்
3.கணக்குப் பதிவாளர்.

*அகவை 18 தொடக்கம் 40 வயதிற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். [ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்]

கல்வித்தகைமை

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களில் சித்தி அடைந்திருக்கவேண்டும்.

மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்கள் 10.03.2005ஆம் திகதிக்கு முன்பாக தங்களது விண்ணப்பங்களை ஆளணி நிர்வாகப்பகுதி, தமிழர் புனர்வாழ்வுக்கழகம், நடுவப்பணியகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும்.

ஆளணி முகாமையாளர்,
ஆளணி நிர்வாகப் பகுதி,
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
நடுவப்பணியகம், கிளிநொச்சி.

(சி-11354)


— சுனாமியால் பாதிக்கப்பட்ட —

# 12 சிறுவர் மன்னார் செபஸ்தியார் பேராலய பங்குத் தந்தையால் பொறுப்பேற்பு

(மன்னார்)

அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட சுனாமி வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 12 சிறார்களை மன்னார் புனித செபஸ்தியார் பேராலய பங்குத் தந்தை அருட் திரு. திருஞானபிள்ளை அவர்கள் பொறுப்பேற்று அவர்களுக்கு ஒரு சிறுவர் இல்லத்தை ஏற்படுத்தி அவர்களுக்கு கல்வி முதல் சகல வசதிகளையும் செய்து கொடுத்துள்ளார்.

இச் சிறுவர்கள் 10 முதல் 15 வயது க்குட்பட்டவர்களாவர். இவர்கள் மணற்காடு ஜெயந்திபுரத்தையும் முல்லைத்தீவு கள்ளப்பாட்டையும் சேர்ந்தவர்களாவர். (18)

# பாரிய கிடங்குகளுடன் முள்ளியவளை-வற்றாப்பளை வீதி

(முள்ளியவளை)

முள்ளியவளை-வற்றாப்பளை வீதி குன்றும் குழியுமாகவும், பாரியஅறுத்தோடிக்கிடங்காவும் உள்ளதால் மக்கள் பெரும் அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர்.

மேற்படி வீதியில் ராணி மில்லடி பகுதி மிக மோசமான பாரிய குன்றும் குழியுமாகவும் அண்மித்த பகுதியில் பாரிய அறுத் தோடிக் கிடங் காகவும் உள்ளதால் இவ்வீதியூடாகச் செல்லும் வாகனங்கள் தடம் புரளும் அபாயநிலை காணப்படுவதுடன் இப்பகுதியில் மோட்டார் வண்டிகள் விழுந்து விபத்துக்குள்ளாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.மேற்படி வீதி நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படவில்லை. என்பதுடன் இவ்வீதி வீதி,அபிவிருத் தித் திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

# வவுனியாவில் வன்னியூர்க் கவிராயரின் இரு நூல்கள் வெளியீட்டு நிகழ்வு

(வவுனியா)

வன்னியூர்க் கவிராயரின் "அமுதகங்கை" மற்றும் "சுனாமிப் பேரலையே" கவியரங்கக் கவிதைகள் என்ற இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு. நேற்று வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க நடராஜர் மண்டபத்தில் நடைபெற்றது.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ்வெளியீட்டு நிகழ்விற்கு முல்லைமணி வே.சுப்பிரமணியம் அவர்கள் தலைமை தாங்கினார். வரவேற்புரையை இ.ராஜேஸ்வரன் நிகழ்த்தினார். " அமுதகங்கை" என்ற நூலை முல்லைமணி வே.சுப்பிரமணியம் அவர்கள் வெளியிட்டு வைக்க முதற்பிரதியை சிவநெறிப்புரவலர் சி.ஏ.இராமசுவாமி பெற்றுக்கொண்டார். நூல்அறிமுக உரையை ஐ.கதிர்காம சேகரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து "சுனாமிப் பேரலையே" என்ற நூலை முல்லைமணி வே.சுப்பிரமணியம் அவர்கள் வெளியிட்டுவைக்க முதற்பிரதியை சுத்தானந்த இந்து இளைஞர் சங்க செயலாளர் தர்மதேவன் பெற்றுக் கொண்டார். இறுதியாக தமிழ்மணி அகளங்கன் அவர்கள் தலைமையில் "மீண்டும் எழுவோம்" என்ற கவியரங்கம் நடைபெற்றது. (10)

# இனந்தெரியாதவர்களின் தாக்குதலினால் இரு இளைஞர்கள் படுகாயம்

(வவுனியா)

வவுனியாவில் இனம் தெரியாதவர்களின் தாக்குதலினால் இரு இளைஞர்கள் படுகாய மடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு 8.30 மணியளவில் உக்குளாங்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவரும் முஸ்லிம் இளைஞர் ஒருவருமே இனந் தெரியாதவர்களின் தாக்குதலுக்குள்ளாகி படுகாயம் அடைந்துள்ளனர். இவர்கள் இருவரும் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்ட பின் தமிழ் இளைஞர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசால்லைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (10)


## ஆறாத துயருடன் ஆறு ஆண்டுகள்



அன்னை மடியில்
1954-06-13

ஆண்டவன் அடியில்
1999-02-03

### அமரர் கந்தையா தங்கராசா
[சின்னராசா]

திதி
24.02.2005

ஆறு ஆண்டுகள் ஓடுகின்ற ஆறாய்
ஓடி மறைந்திடினும்
மாறாத உன்பாசம் மறவாது எம் வாழ்வில்
பாசத்தின் உறைவிடமே
அன்பின் அமைவிடமே
தாராள உன் அன்பை எண்ணி
ஆறாத துயருடன் இன்று மட்டுமல்ல
நாள்தோறும் நாங்கள் தவிக்கிறோம்.

நி.முகவரி.
வைத்தியசாலை வீதி,
அக்கராயன் குளம். (5747)

என்றும் உங்கள் பிரிவால்
துயருறும்
மனைவி, பிள்ளைகள்.

# ஜம்மு காஷ்மீரில் பனிப்பாறைகள் சரிந்ததில்

# 300 பேர் பலி, 200 பேரைக் காணவில்லை!

## மீட்புப் பணிகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன

(புதுடில்லி)

**இந்தியாவின் ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் பனிப்பாறைகள் சரிந்து விழுந்ததால் இறந்தவர்களின் எண்ணிக்கை 300 ஆக உயர்ந்துள்ளது.கடந்த செவ்வாய்க்கிழமை மேலும் 32 சடலங்கள் மீட்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.**

அனந்தநாக் மாவட்டத்தில் பனிப்பாறைகளுக்கு அடியில் சிக்கியிருந்தவர்களில் 74 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டனர். காணாமல் போனவர்களின் எண்ணிக்கை சரியாகத் தெரிய வில்லை. 50 பேருக்கு மேல் காணவில்லைஎன்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். ஜம்மு பகுதியில் 62பேர் காயமடைந்துள் ளனர். 30 பேரைக்காணவில்லை மலைப்பகுதிகளான தோடா, பூஞ்ச், ரஜோரி மாவட்டங்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம் என்று அதிகாரிகள் கூறினர்.

தோடா மாவட்டத்தில் பல பகுதிகளில் உணவுப் பொதிகள் அத்தியாவசியப் பொருட்கள், போர்வைகள் விமானத்தில் இருந்து போடப்பட்டன. பூஞ்சு மாவட்டத்தில் உணவுப் பொதிகள் போடப்பட்டன. ஜம்மு -காஷ்மீர் நெடுஞ்சாலையில் ஜவஹர் சுரங்கப் பாதையில் சிக்கியிருந்த இராணுவ வீரர்களில் 51 பேர் அங்கிருந்து மீட்கப்பட்டு பானிஹாலில்இருக்கும் இராணுவ முகாமுக்கு அனுப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

அச்சுரங்கப்பாதையில் 400 பேர் சிக்கியுள்ளதாக பத்திரிகை களில் வெளியான செய்திகளை மேஜர் ஜெனரல் ஆர்.எஸ்.மேத்தா மறுத்தார். 305 பேர்தான் சுரங்கப் பாதையில் சிக்கியிருந்தனர். உயிர் தப்பியோரில் இரு பத்திரிகையாளர்கள். இந் தோனேஷிய தீபெத்திய பொலிசார் எல்லைப் பாது காப்புப் படையினர் உள்ளிட்ட வர்களும் இதில் அடங்குவர். அவர்களுக்குத்தேவையான உணவும், மருந்துப் பொருட்களும் போதிய அளவு இருக்கின்றன. எனக் கூறினார்.

பனிப்பாறைகள் மீண்டும் சரிந்து விழக்கூடிய அபாயம்



இருப்பதால் மலை அடிவாரத்தில் உயரமான பகுதிகளில் வசிப் போரைப் பாதுகாப்பான இடங்க ளுக்குச் செல்லுமாறு அறிவுறுத் தப்பட்டுள்ளது. வெயில் வரத் தொடங்கி யிருப்பதால் பனிப் பாறைகள் சரிந்து விழும் அபாயம் அதிகரித்துள்ளது. மாநிலத்தில் தற்போதைய பனிப்பொழிவு தொடர்பான சம்பவங்களில் உயிரி ழந்தவர்களின் ஒவ்வொருவரின் குடும்பத்துக்கும் தலா ரூபா.ஒரு இலட்சம் இழப்பீடு அளிக்கப்படும் என்ற முதல்வர் மு.்.ப்தி முகமது சய்யீத் சட்டப் பேரவையில் அறி வித்துள்ளார். பாதிக்கப்பட்டவர்க ளுக்கு அவசர நிவாரணம் அளிக்கவும் பல்வேறு பகுதிகளில் சிக்கியுள்ளோரை மீட்கவும் அனைத்து முயற்சிகளும் அரசு மேற்கொள்ளும் எனவும் தெரிவித் துள்ளார். இறந்தவர்கள் ஒவ் வொருவரின் குடும்பத் துக்கும் மத்திய அரசு சார்பில் ரூபா.50 ஆயிரம் இழப்பீடு அளிக்கப்படும் என்று பிரதமர் மன்மோகன் சிங் அறிவித்துள்ளார். இதேவேளை பாதிக்கப்பட்ட பகுதிகளை காங்கி ரஸ் தலைவர் சோனியா காந்தி பார்வையிட்டு நிவாரணப் பணி கள் குறித்து முதல்வரிடம் அவர் கேட்டறிவார்

# வனவளக் கட்டடம் மீது தீவிரவாதிகள் தாக்குதல்!

(ஆந்திரா)

ஆந்திர மாநிலம் வாரங்கல் மாவட்டம் ஒத்தகட பகுதியில் வன அலுவலக கட்டடத்தை மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் குண்டுவைத்துத் தகர்த்துள்ளனர்.

நள்ளிரவு 1மணி அளவில் நக்சலைட்டுகள் கும்பலாக வந்து பொலிசாரை நோக்கிச் சுட்டனர். இதனால் நிலைகுலைந்துபோன அவர்கள் அங்கிருந்துஓட்டம் பிடித்தனர்.

இதையடுத்து வன அலுவலக கட்டடத்தில் குண்டுகளை வைத்து மின்கலத்தினால் அதை வெடிக்கச்செய்தனர். இதில் கட்டடம் முழுவதும் தரைமட்டமானது. இதில் ரூ.15 லட்சம் மதிப்புள்ள பொருட்கள் நாசமாயின. தகவல் அறிந்ததும் பொலிஸ் உயர் அதிகாரிகள் சம்பவ இடத்தைப் பார்வையிட்டனர். தொடர்ந்து பொலிஸார் விசாரித்து வருகிறார்கள்.

# பீகார் , ஜார்க்கண்ட் மாநிலங்களின் இறுதிவாக்களிப்பு வன்முறைச்சம்பவங்களில் 5 பேர் பலி!

(பொக்காரே)

பீகார்-ஜார்க்கண்ட் மாநில சட்டசபைத் தேர்தலில் ஏற்கனவே இரண்டு கட்ட வாக்குப்பதிவு முடிந்து விட்டது. 3ஆவது இறுதிக்கட்ட வாக்குப்பதிவு நேற்று நடந்தது. பீகார் மாநிலத்தில் 93 தொகுதிகளிலும், ஜார்க்கண்ட்டில் 28 தொகுதிகளிலும் நேற்று வாக்குப்பதிவு நடைபெற்றது.

முதல் இரண்டு கட்ட வாக்குப் பதிவின்போது வன்முறைச் சம்பவங்கள் நடந்ததால் நேற்று வாக்குச்சாவடிகளில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. பதட்டம் நிறைந்த வாக்குச் சாவடிகளில் இராணுவத்தினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

நச்சலைட்டுக்கள் மற்றும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் ஊடுருவலைத் தடுக்க பீகார் மாநிலத்தில் இந்தியா-நேபாள எல்லை மூடப்பட்டு சீல்வைக்கப்பட்டது. வாக்குப்பதிவின் போது கலவரத்தில் ஈடுபடுவோரைக் கண்டதும் சுடுவதற்கும் உத்தரவிடப்பட்டு இருந்த அதேவேளை விமானப்படை உலங்குவானூர்திகளும் ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்பட்டன.

கடும்பனி காரணமாக தொடக்கத்தில் வாக்குப்பதிவில் மந்தமான நிலை ஏற்பட்டது. நேரம் செல்லச்செல்ல வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடந்தது. பீகார் மாநிலத்தில் நடந்த இறுதிக்கட்ட வாக்குப்பதிவில் ஆங்காங்கே வன்முறைச்சம்பவங்கள் நடந்தன. இதில் பலியானவர்கள் எண்ணிக்கை 5ஆக உயர்ந்தது. பாட்னா மாவட்டத்தில் கலவரக்காரர்கள் மீது எல்லைப் பாதுகாப்புப்படை வீரர்கள் துப்பாக்கியால் சுட்டதில் ஒருவர் பலியானார்.வைஷாலி மாவட்டத்தில் வெடிகுண்டு தயாரித்தபோது அது வெடித்ததால் மோகன்சகானி என்ற குற்றவாளி இறந்தான். சிவானி மாவட்டத்தில் ஹர்நாத்பூர் கிராமத்தில் நடந்த குண்டு வெடிப்பில் 3 பேர் இறந்தனர். நாலந்தா மாவட்டத்தில் ஹில்சா வாக்குச்சாவடி மீது வன்முறைக்கும்பல் தாக்குதல் நடத்தியது.

இதில் தேர்தல் அதிகாரி காயமடைந்தார். ஹாஜிப்பூரில் குண்டு வெடித்ததில் ராஷ்ரீய ஜனதாத் தள நிர்வாகிகள் ராஜ்லகான்ராய், துர்க்காராய் ஆகியோர் காயமடைந்தனர்.

# சமாதானத்துக்கான நோபல் பரிசு இந்தியருக்கு!

அமைதிக்கான நோபல் பரிசுக்கு இந்திய ஆன்மீகத் தலைவர் ரவிசங்கரின் பெயர் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

உலகின் உயரிய விருதான நோபல் பரிசு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. பரிசுக்கு உரியவர்களின் பெயர் ஐப்பசி மாதம் அறிவிக்கப்பட்டு மார்கழி 10ஆம் திகதி அன்று பரிசுகள் வழங்கப்படும்.

இந்த விருது வழங்குவதற்குத் தகுதியானவர்களின் பெயர்களைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே நோபல் பரிசு பெற்றவர்கள் மற்றும் சில பல்கலைக்கழக பேராசிரியர்கள் சிபார்சு செய்யலாம்.

இந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசுக்கு இந்தியாவைச் சேர்ந்த ஆன்மீகத்தலைவர் ரவிசங்கர் உட்பட 166 பேர் சிபார்சு செய்யப்பட்டுள்ளனர். போப் ஆண்டவர் ஜோன்போல், பிரபல பாடகர் போனோ, அமெரிக்க முன்னாள் அமைச்சர் கொலின் பவல் ஆகியோரின் பெயர்களும் சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

# பிரபல பின்னணிப் பாடகர் புருஷோத்தமன் மரணம்

கேரள மாநிலம் திருவனந்தபுரம் அருகே உள்ள சாஸ்த மங்கலத்தைச் சேர்ந்தவர் பட்டணங்காடு புருஷோத்தமன் (வயது 56) இவருக்கு நேற்றுத் திடீர் என்று மாரடைப்பு ஏற்பட்டது.

உடனே அவரை திருவனந்தபுரத்தில் உள்ள மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர். அங்கு அவருக்கு வைத்தியர்கள் தீவிர சிகிச்சை அளித்தனர். இருந்தபோதிலும் அவரது உயிர்பிரிந்தது.

இவரது மரணச்செய்தி கிடைத்ததும் பட்டணங்காடு புருஷோத் தமன் உடலுக்கு திரைப்படத்துறையினர் அரசியல் வாதிகள் அஞ்சலி செலுத்தினார்கள். கேரள அமைச்சர் கார்த்திகேயனும் அவரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்.

பட்டணங்காடு புருஷோத்தமன் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட நாடகப்பாடல்களைப்பாடி இருக்கிறார். ஏராளமான சினிமாப் பாடல்களையும் இவர் பாடியுள்ளார். அத்தோடு 40ஒலிநாடாக்களையும் அவர் வெளியிட்டுள்ளார். சிறந்த பாடகருக்கான விருதையும் பெற்றவராவார்.

# ஆந்திர சட்ட மன்றத்தில் அமளி துமளி

# 32 சட்ட மன்ற உறுப்பினர்கள் இடை நீக்கம்

(ஹைதராபாத்)

ஆந்திர சட்ட மன்றத்தில் அமளியில் ஈடுபட்ட தெலுங்குதேச சட்ட மன்ற உறுப்பினர்கள்32பேர் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

ஆந்திர சட்ட மன்றம் நேற்றுமுன்தினம் கூடிய போது எதிர்க்கட்சியான தெலுங்கு தேசக் கட்சியினர் தமது கட்சி உறுப்பினரான பரித்தாலா ரவி படுகொலை செய்யப்பட்ட பிரச்சினையை அவை யில் எழுப்பினார்கள். ரவியின் கொலை அரசியல் ரீதியான கொலை என்று கூறி அது தொடர்பாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வர முயன்றார் கள். கேள்வி நேரத்தை ஒதுக்கி வைத்து விட்டு இந்தப் பிரச்சினை பற்றி விவாதிக்க வேண்டுமென வற்புறுத்தினார்கள்.

ஆனால் சபாநாயகர் அதை ஏற்கவில்லை. இந்தப் பிரச்சினை குறித்து பின்னர் விவாதிக்கலாம் எனக் கூறியதை அடுத்து தெலுங்குதேச உறுப்பினர் கள் தலை சாய்க்கவில்லை. அவர்கள் இருக்கை களை விட்டு எழுந்து சபாநாயகர் இருக்கையை சூழ்ந்து கோஷமிட்டார்கள். இதனால் அவையில் பரபரப்பு ஏற்பட்டது. தெலுங்கு தேச உறுப்பினர் என்.ஜனார்த்தன் ரெட்டி அவையில் தகாத வார்த்தைகளைப் பேசினார். அவர் நிபந்தனையற்ற மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று சபாநாயகர் வலியுறுத்தினார். ஆனால் ஜனார்த்தன் மன்னிப்பு கேட்கவில்லை. இதையடுத்து அவரை இடைநீக்கம் செய்யும் தீர்மானத்தை சட்ட மன்ற விவகார அமைச்சர் ரோசய்யா கொண்டு வந்ததையடுத்து ஜனார்த்தன் ரெட்டி நீக்கம் செய்யப்பட்டார். சபையில் நிலைமை கட்டுக் கடங்காமல் போகவே சபாநாயகர் அவையை 20 நிமிடம் ஒத்தி வைத்தார்.

அதன் பிறகு அவை மீண்டும் கூடியது. அப்போதும் கூச்சல், குழப்பங்கள் ஓயவில்லை. ரவி படுகொலை பற்றி உடனே விவாதிக்க வேண்டும் என்று தெலுங்குதேசத்தினர் மீண்டும் அமளி செய்தனர். பா.ஜ உறுப்பினர்களும் தெலுங்கு தேசத்துடன் சேர்ந்து கொண்டனர்.

ஜனார்த்தன்ரெட்டி இடைநீக்கம் செய்யப்பட்டதை



தெலுங்குதேசக்கட்சியினரின் போராட்டம்

கண்டித்து அவருக்கு ஆதரவாக தெலுங்கு தேச சட்ட மன்ற உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். சுமார் ஒன்றரை மணி நேரம் அமளி நீடித்தது. நிலைமை மிகவும் கட்டுக்கடங்காமல் போகவே தெலுங்குதேச ச.ம உறுப்பினர்கள் 31 பேரை, 10 நாட்களுக்கு அவையை விட்டு இடைநீக்கம் செய்யப்பட்டதாக சபாநாயகர் அறிவிததார். குரல் வாக்கெடுப்பு மூலம் இதற்கான தீர்மானம் நிறைவேறியது. இடைநீக்கம் செய்யப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் அவையை விட்டு வெளியேற மறுத்தனர். இதையடுத்து அவை காவலர்களை சபாநாயகர் அழைத்து அவர்களை பலவந்தமாக வெளியேற்றினார். அதன்பின் எதிர்க்கட்சித் தலைவர் என். சந்திரபாபு நாயுடுவிடம் சபாநாயகர் இது குறித்து கருத்து கேட்டார். ஜனநாயகம் படுகொலை ஆகி விட்டது என்று கருத்துக் கூறிய சந்திரபாபு நாயுடு ஆத்திரத்துடன் அவையை விட்டு வெளி நடப்புச் செய்தார்.

# பாகிஸ்தானுடனான கிரிக்கெட் தொடர் நெருக்கடி இந்தியாவுக்கே எங்களுக்கில்லை



"பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் அதிக நெருக்கடி இந்தியாவுக்குத்தான் எங்களுக்கு இல்லை" என்று இன்சமாம் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வரும் 28 ஆம் திகதி முதல் இந்தியாவில் பயணம் செய்துமூன்று டெஸ்ட் மற்றும்ஆறுஒரு நாள் போட்டி கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இந்த நிலையில் இந்தியப் பயணம் குறித்து பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல்-ஹக் கூறியதாவது:

இந்திய அணி கடந்த ஆண்டு பாகிஸ்தானில் பயணம் செய்து விளையாடியபோது டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தொடரை கைப்பற்றியது. இந்த தோல்வியை மனதில் கொண்டு பழிவாங்கும் விதத்தில் தற்போதைய பயணத்தில் எங்கள் அணி (பாகிஸ்தான்) ஆடும் என்று எதிர்ப்பு எழுந்துள்ளது. நாங்கள் பழிவாங்கும் விதத்தில் ஆடமாட்டோம் மாறாக வெற்றியை குறிக்கோளாக வைத்துக் கொண்டு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவோம். இது இருநாட்டுக் கிரிக்கெட் உறவை மட்டுமல்லாமல் நாட்டின் ஒற்றுமையையும் வலுப்படுத்த உதவும் டெண்டுல்கர் சிறந்த வீரர் ஆவார் அவர் அணியில் இடம்பெறும் பட்சத்தில் இந்திய அணி மேலும் வலுப்பெறும். டெண்டுல்கர் உட்பட யாராக இருந்தாலும் அவர்களை நாங்கள் சமாளிப்போம். யாரையும், எதையும் பற்றி கவலைப்பட வேண்டியது இல்லை. எங்கள் அணியினர் முழுத் திறமையையும் வெளிப்படுத்தி ஆடுவர். எங்களுக்கு எந்தவிதமான நெருக்கடியும் இல்லை. நெருக்கடி எல்லாம் இந்திய அணிக்குத்தான். ஏனெனில் சொந்த மண்ணில் ரசிகர்களின் எதிர்பார்ப்புடன் ஆடுவதால் இந்தியாவுக்குத்தான் அதிக நெருக்கடி இருக்கும். போட்டியின் முடிவை அனுபவம் நிர்ணயிக்காது பொறுப்பும், ஆர்வமும்தான் போட்டியை நிர்ணயிக்கும்.

அவுஸ்திரேலிய தொடரை விட சிறப்பாக ஆடுவோம் ஏனெனில் அவுஸ்திரேலிய நிலைமை வேறு, இந்திய நிலமை வேறு ஆகும். இந்தியாவின் தட்பவெப்ப நிலை மற்றும் சீதோஷ்ண நிலை எங்களுக்கு பொருத்தமாகவே இருக்கும் என்றார்.

# பரபரப்பு மிக்க பாக். இந்தியத் தொடர் ரத்தாகும் அபாயம் தோன்றலாம்?


ரன்பீர் சிங் மகேந்திரா

மிக அதிகம் எதிர்பார்க்கப்படும் இந்தியா, பாகிஸ்தான் கிரிக்கெட் தொடர் ரத்தாகும் அபாயம் உருவாகியுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இம்மாதம் 25ஆம் திகதி இந்தியப்பயணம் வருவதாக இருந்தது. அகமதாபாத் நகரில் விளையாடமாட்டோம் என்று வீண் பிடிவாதம் பிடிக்க மூன்று நாள் தாமதமாக 28ஆம் திகதி இந்தியா வருகிறது. அந்த அணி இப்போது ஒரேடியாக இந்தத் தொடரே ரத்தாகும் சூழல் நிலவுகிறது.

இந்தத் தொடருக்கான தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமை விவகாரம் தற்போது நீதிமன்றவிசாரணையில் இருக்கிறது. ஜீ.தொலைக் காட்சி, ஈ.எஸ்.,பி.என்.ஸ்டார் ஸ்போர்ட்ஸ் இடையே சென்னை ஐகோர்ட்டில் வழக்கு நடந்து வருகிறது. தீர்ப்பு வரத் தாமதமாகும் பட்சத்தில் தொடர் ரத்தாகும் என்று தெரிகிறது. இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் ரன்பீர்சிங் மகேந்திரா நேற்று முன்தினம் அளித்தப் பேட்டி;

பாகிஸ்தான் தொடர்தொடங்க இன்னும் சில தினங்களே உள்ளன. ஆனால் நேரடி ஒளிபரப்பு விடயத்தில் குழப்பம் நீடிக்கிறது. இந்த விடயம் நீதிமன்ற விசாரணையில் இருப்பதால், கிரிக்கெட்சபை இதில் தலையிடமுடியாது. இந்த விடயம் ஒரு முடிவுக்கு வராத பட்சத்தில், அநேகமாக தொடர் ரத்து செய்யப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.


லோஸ் ஏஞ்சல்சில் அண்மையில் நடைபெற்ற குத்துச்சண்டை போட்டியில் வெற்றிபெற்ற அமெரிக்க வீரர் பேனாட் ஹொப்கின்ஸ்.

# அவுஸ். வீரர் ஹெய்டனுக்கு காயத்தால் அவதி ஏனைய போட்டியில் விளையாட முடியா நிலை



நேற்று முன்தினம் நியுசிலாந்து அணியுடன் ஆடி வெற்றிக்கு வழிசமைத்து 114 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர் மத்தியு ஹெய்டன் தோளில் காயமேற்பட்டதால் மிகுதியுள்ள ஒருநாள்போட்டிகளில பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது

வலது தோள்மூட்டில் அவருக்கு காயம் ஏற்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதால் அதை குணமாக மூன்று வாரம் வரை எடுக்கும் என அவரின் வைத்தியர் அலெக்ஸ் கௌன்டோரி தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக எஞ்சியுள்ள மூன்று ஒருநாள் போட்டிகளிலும் வரும் மார்ச் 10ஆம் திகதி ஆரம்பமாகும் டெஸ்ட் போட்டியிலும் அவர் பங்கேற்க மாட்டார்.

எனினும் அவர் அதுவரை பங்கேற்கமாட்டார் என்பதை தெரிவிக்க அவதானமாக இருக்கிறோம் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். சில நேரம் நன்றாக ஆடுகிறார் சிலநேரம் அது முடியாமல் போகிறது இதனால் எமக்கு எவ்வித தீர்மானமும் எடுக்கமுடியாது என்றும் பரிசோதனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# மே.தீவு நிர்வாகம் அவசர அழைப்பு

அண்மையில் அவுஸ்திரேலிய சுற்றுலாவின் போது மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி வீரர்கள் தவறான நடவடிக்கைகளில் (விளம்பரம்) ஈடுபட்டனர் என கிரிக்கெட் போட்டிகளுக்கு ஆதரவு வழங்கும் அந்நாட்டு டிஜசல் நிறுவனம் குற்றம்சுமத்தியது தொடர்பாக அதனுடன்சந்திப்பொன்றை நடத்த கிரிக்கெட்சபை நிர்வாகம்அவசர அழைப்பொன்றை விடுத்துள்ளது.

மேற்படி குற்றச்சாட்டு முன்னணி வீரர்கள் சிலரை தனிப்பட்ட ரீதியில் அவமானப்படுத்தும் செயலாகும் எனக் கருதியதால் இது தொடர்பாக உடனடி பேச்சுவார்த்தை ஒன்றை நடத்த கிரிக்கெட்சபை முடிவு செய்துள்ளது.

# டெண்டுல்கர் முழு உடல் தகுதியுடன் இல்லை என்கிறார் உடற்பயிற்சி நிபுணர்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் சச்சின் டெண்டுல்கர். இடது முழங்கையில் ஏற்பட்ட காயத்தால் கடந்த ஆண்டு அவர் அவதிப்பட்டார். இதனால் மூன்று மாதம் விளையாடவில்லை. இந்த ஆண்டும் அவர் அதே காயத்தில் உள்ளார்.சமீபத்தில் நடந்த சலஞ்சர் போட்டியில் ஆடவில்லை.

இதற்கிடையே தான் முழு உடல் தகுதியுடன் இருப்பதாகவும், பாகிஸ்தான் தொடரில் ஆடுவேன் என்றும் டெண்டுல்கர் கூறினார். அதற்கு ஏற்றவாறு ஜதராபாத்தில் நடைபெற்று வரும் துலீப்கிண்ணபோட்டியிலும் விளையாடி வருகிறார்.

இந்நிலையில் இந்திய அணியின் புதிய உடற்பயிற்சி நிபுணர் ஜான்குளோஸ்கர் டெண்டுல்கரின் உடல் தகுதி குறித்து சந்தேகம் எழுப்பி உள்ளார். அவர் முழு உடல் தகுதியுடன் இல்லை என்று கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது,

டெண்டுல்கர் உடல் தகுதியில் மெதுவாக முன்னேற்றமடைந்து வருகிறார். இதனால் இப்போதுள்ள சூழ்நிலையில் எதுவும் கூற இயலாது துலீப்கிண்ணப் போட்டி முடிவில் அவர் உடல் தகுதி தெரிய வரும். காயமடைந்த இர்பான்பதான்,எல்.பாலாஜி குணமடைந்து விட்டனர். பயிற்சியின் போது பதான் சிறப்பாக பந்து வீசினார். அவரது உடல் தகுதி குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். இவ்வாறு ஜான்குளோடர் கூறினார்.

# டேவிஸ் கோப்பை டென்னிஸ் தொடர் அவுஸ். அணியில் இருந்து பிலிப்போசிஸ் நீக்கம்

அவுஸ்திரேலிய டென்னிஸ் அணியில் இருந்து மார்க் பிலிப்போசிஸ் நீக்கப்படடுள்ளார்.டேவிஸ் கோப்பை டென்னிஸ் தொடரில் அவுஸ்திரேலியா, ஆஸ்திரியா அணிகளுக்கு இடையே அடுத்த மாதம் மோதல் நடக்கிறது. மார்ச் 4முதல் 6வரை சிட்னியில் நடக்கும் இந்தத் தொடருக்கான அவுஸ்திரேலிய அணியிலிருந்து முன்னணி வீரர் மார்க் பிலிப்போசிஸ் நேற்று முன்தினம் நீக்கப்பட்டார்.

சமீபகாலமாக மார்க் ஆட்டம் அவ்வளவு திருப்தியில்லை. இதையடுத்து அவர் அணியிலிருந்து நீக்கப்பட்டடுள்ளதாக பயிற்சியாளர் வாலி மசூர் தெரிவித்தார். "மார்க் சிறந்த வீரர் ஆனாலும், அவருக்கு சிறிது ஓய்வு தேவை. இன்னும் கொஞ்சம் தன்னை அவர் தயார் படுத்திக் கொள்ளவேண்டும் மீண்டும் முழுப் பலத்தை அவர் திரும்பப் பெறும் பட்சத்தில் அணியில் அவருக்கான இடம் கட்டாயம் காத்திருக்கும்" என்கிறார் மசூர்.




# பாக். வீரர்களுக்கு நிதானம் வேண்டும்


-அப்பாஸ்

எதிர்வரும் இந்தியாவுடனான கிரிக்கெட் போட்டிகளில் மிக கவனத்துடன் ஆடுகளத்தில் நிலைத்து நின்று ஆடவேண்டும் என பாகிஸ்தானிய துடுப்பாட்ட வீரர்களுக்கு முன்னாள் நட்சத்திர துடுப்பாட்டவீரர் சஹீர் அப்பாஸ் அறிவுரை கூறியுள்ளார்.

அப்பாஸ் இந்தியாவுக்கு எதிராக இருமுறை இரட்டைச் சதங்களைப் பெற்றவராவார்.

இவர் மேலும் வீரர்களுக்கு கூறும்அறிவுரையில் குறிப்பிட்டுள்ளதாவது, சச்சின் டெண்டுல்கர் அணியின் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்றும் இந்தியத் துடுப்பாட்டத்தில்அவர்ஓட்டங்களை அடுக்குவார் எனவும் தெரிவித்துள் ளார். காயம் காரணமாக அவர் ஆடமாட்டார் எனத் தெரிவித்த போது அணிக்குத் திரும்புவது மேலதிக பலத்தை கொடுக்கும் என்று குறிப்பிட்டதுடன் கடந்த வருடம் அவர் பங்களிப்பில்லாத அணி சரியாக அமையவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் சதம் அடிக்கும் ஸ்டீவ் பக்னர்



கிரிக்கெட் போட்டியின் போது வீரர்கள் சதம் அடித்து சாதனை படைப்பது அவ்வப்போது நடைபெற்றுவரும் விடயமாகும். ஆனால் தற்போது போட்டி நடுவர் ஒருவர் சதம் அடித்து சாதனை படைக்க தயார் நிலையில் உள்ளார்.

அதாவது, டெஸ்ட்கிரிக்கெட் போட்டியில் எந்த ஒரு நடுவரும் இதுவரை 100போட்டிகளில் நடுவராக பணியாற்றியது இல்லை. ஆனால் தற்போது நடுவர் ஸ்டீவ் பக்னர் அந்த சாதனையை படைக்கவுள்ளார்.

இந்தியா-பாகிஸ்தான் இடையேயான 2ஆவது டெஸ்ட் போட்டி வரும் 16ஆம்திகதி முதல் 20ஆம்திகதி வரை கொல்கத்தாவில் நடக்கிறது. இந்தப் போட்டியில் ஸ்டீவ் பக்னர் நடுவராக பணியாற்றவுள்ளார். இது அவருக்கு 100ஆவது போட்டி என்பது குறிப்பிடத்தக்கது. ஸ்டீவ் பக்னருக்கு அடுத்ததாக அதிகபட்சமாக டேவிட் ஷெப்பேர்ட் (86போட்டி) வெங்கட்ராகவன் (73போட்டி) உள்ளனர்.

# இம்ரான்கானின் தயவால் கிடைத்ததே துணைத்தலைவர் பதவி-யுனிஸ்ஹான்




இம்ரான்கானின் தயவால்தான் தனக்கு துணைத் தலைவர் பதவி கிடைத்தது என்று யுனிஸ்ஹான் கூறியுள்ளார்.

எனது தந்தை மற்றும் இம்ரான்கானால் ஊக்குவிக்கப்பட்டேன் எனது தந்தை இறப்பதற்கு ஒரு நாள் முன்பு என்னிடம் பேசும் போது பாகிஸ்தான் அணிக்காக உனது பங்கு அதிகமாக இருக்கவேண்டும் என்றார். நான் இந்த அளவுக்கு உயர்ந்து இருப்பதற்கு எனது தந்தை காரணம்.

இம்ரான்கான் என்னை தலைவராக வேண்டும் என்று கூறியது மகிழ்ச்சி எனக்கு அவர் வெளிப்படையாக ஆதரவு தந்தார்.அவரால் தான் எனக்கு துணைத் தலைவர் பதவி கிடைத்தது.

இந்தியாவுக்கு எதிராக இதுவரை நான் டெஸ்டில் விளையாடியது கிடையாது. துணைத் தலைவராக டெஸ்ட்டில் விளையாடுவது முக்கியமானதாகும். இந்திய மக்கள் மனித நேயம்மிக்கவர்கள் விளையாட்டை ரசிப்பவர்கள் இந்தத் தொடரை ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளேன் என்றார்.

## சிந்தனைக்கு



சுதந்திரம் வேண்டிக் கிளர்ந்தெழும் ஓர் இனம், பொருளாதார வாழ்வில் தன் சொந்தக்காலில் நிற்கவேண்டும்; அத்தகைய இனத்தால் தான் சுதந்திரத்தை அனுபவிக்க இயலுமென்பது நியதியாகும்.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 24-02-2005

தொலைபேசி 060-2213244

தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் natham 23 ela @ yahoo. com


## எதிர்காலம் குறித்து...!

மூன்றாண்டு கால யுத்த நிறுத்த முடிவில் இவ் உடன்பாட்டின் எதிர்காலம் குறித்துப் பலத்த கேள்வி எழுந்துள்ளதெனில் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஏனெனில் இன்று யுத்த நிறுத்தத்தின் எதிர்காலம் குறித்து மக்கள் மத்தியில் பெரும் அவநம்பிக்கையே நிலவுகின்றது. இதனை விடுதலைப்புலிகளும்-சிங்கள அரசியற் தலைவர்கள் சிலரும் பிரதிபலிக்காமல் இல்லை.

இந்த வகையில் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட இருதரப்பும்-அதாவது விடுதலைப்புலிகள் தரப்பும்-சிறிலங்கா அரச தரப்பில் கையொப்பமிட்ட அன்றைய ஆளும் கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியும் போர் நிறுத்தத்தின் எதிர்காலம் குறித்து ஐயப்பாடே வெளியிட்டுள்ளன.

யுத்த நிறுத்தம் மூன்றாண்டு நிறைவடைந்த வேளையில் சமாதான ஏற்பாட்டாளரான நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம்முடனான சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளரிடம் பேசிய அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள்

"படைத்தரப்பு ஆயுதக்குழுக்களைக் கொண்டு விடுதலைப்புலிகள் அமைப்பின் மீதும் தேசப்பற்றாளர்கள் மீதும் மக்கள் மீதும் ஒரு மறைமுக யுத்தத்தைத் தொடுத்துக்கொண்டிருக்கின்றது. இது உடனடியாக நிறுத்தப்படவேண்டும். இது தொடர்வதாக இருந்தால் இந்த அமைதிச் சூழல், யுத்த நிறுத்தச் சூழல் என்பனவெல்லாம் தகர்க்கப்பட்டு விடும்" என்றார்.

இதேவேளை சிறிலங்கா அரச தரப்பில் யுத்த நிறுத்த உடன்பாட்டில் கைச்சாத்திட்டவரான தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க போர் நிறுத்த உடன்பாடும், போர் நிறுத்த நடவடிக்கைகளும் மீண்டும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாகத் தெரிவித்ததோடு "சில கட்சிகள் நாடு மீண்டும் யுத்தத்திற்குத்திரும்புவதை விரும்புகின்றன. ஆனால் எந்தவொரு யுத்தத்தையும் எதிர்கொள்ளும் சக்தி இந்தத் தேசத்திற்கு இல்லை. அப்படி ஒரு யுத்தம் வருமேயானால் நாம் அனைவரும் அழிக்கப்பட்டு விடுவோம்" என எச்சரித்துள்ளார்.

இவ்வாறாக யுத்த நிறுத்த உடன்பாட்டில் கைச்சாத்திட்ட இரு தரப்பினர் கூறிக்கொள்கையில் சிறிலங்கா அரசாங்கமோ யுத்த நிறுத்தம் தொடர்பாக தனது நம்பிக்கையை வெளியிட்டதோடு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்தும் பேச்சுக்கள் நடத்த அரசாங்கம் தயாராவுள்ளது என்ற அறிவிப்பையும் வெளியிட்டுள்ளது.

இதில் விடுதலைப்புலிகளும், ஐ.தே. கட்சித்தலைவர் ரணில்விக்கிரமசிங்கவும் கூறுபவை சரியானவை யதார்த்த பூர்வமானவை. உண்மையில் நாட்டில் யுத்த நிறுத்தம் கேள்விக்குள்ளாகும் நிலையே அதிகரித்துள்ளது. அதாவது விடுதலைப்புலிகள் மீது அரசாங்கம் தொடுத்திருக்கும் மறைமுக யுத்தமானது யுத்த நிறுத்த உடன்பாட்டின் பின்னரும் தனது இராணுவ நடவடிக்கைகளை அது கைவிடவில்லை என்பதையே காட்டுகிறது.

இதனால் யுத்த நிறுத்த காலத்தில் கூட வடக்கு கிழக்கில் மக்கள் இயல்புவாழ்க்கை வாழக் கூடியதானதொரு சூழ்நிலை உருவாகியதாக இல்லை. அதாவது அரசாங்கம் நடாத்தும் மறைமுகப் போரினால் இயல்பு வாழ்வு பெரியளவில் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. மக்கள் யுத்தமானது எவ்வேளையிலும் வரலாம் என்ற எதிர்பார்ப்புடனும் அச்சத்துடனுமே வாழ வேண்டிய நிலை உள்ளது.

இதேசமயம் சனாதிபதி சந்திரிகா தரப்போ யுத்த நிறுத்தம் திருப்திகரமாக அமுலாகின்றது எனவும் விரைவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தகவல்களை வெளியிட்டுள்ளது. இந்த வகையில் வெளியானதே விடுதலைப்புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்த அரசாங்கம் தயாராகவுள்ளது என்ற அறிவிப்பாகும்.

ஆனால் அரசாங்கத்தின் இதுபோன்ற அறிவிப்புக்கள் ஒன்றும் புதுமையானதல்ல. நெருக்கடிகள், அழுத்தங்கள் வரும் போது அரசாங்கம் இவ்வாறு அறிவிப்புச் செய்வது வழமையான தொன்றே. இத்தகையதொரு சூழ்நிலையிலேயே அரசாங்கம் இம்முறையும் அறிவிப்புச் செய்திருத்தல் வேண்டும். இந்தவகையில் தற்பொழுது விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி சுனாமி அனர்த்தத்திற்குள்ளான மக்களுக்குச் சேவை புரியுமாறு அரசு மீதான அழுத்தம் சர்வதேச சமூகத்தினால் பிரயோகிக்கப்பட்டு வருகின்றமை வெளிப்படையானதொன்று இதன் விளைவே அரசாங்கம் இடைக்கால நிர்வாகம் பற்றி புலிகளுடன் பேசுவதற்குத் தயார் என்ற அரசின் அறிவிப்பாகும்.

அரசாங்கம் இத்தகைய அறிவிப்புக்களை வெளியிடுவதும் பின்னர் இழுத்தடிப்புச் செய்வதென்பதும் வழமையானதென்பது ஒருபுறம் இருக்க ,சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கை தொடர்பாக பொதுக் கட்டமைப்புக் குறித்து உலகமும், தமிழ்மக்களும் பேசிக்கொண்டிருக்கையில் அரசாங்கம் இடைக்கால நிர்வாகம் பற்றிப் பேச்சுநடத்த தயாரென அறிவித்ததன் அர்த்தம் என்ன? சுனாமி அனர்த்தத்திற்கான கட்டமைப்பு தேவையற்றது என்றா? அன்றி சுனாமி அனர்த்த்தினால் கிடைக்கப் பெற்ற நிதியை தமிழருக்குப் பகிர்ந்தளிக்கத் தேவை இல்லை என்பதினாலா?

# தனி மனித சுதந்திரத்தையும், உரிமைகளையும்

# அவசரகாலச்சட்டம் எதேச்சாதி காரமாக மறுக்கிறது

### - வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகம் அறிக்கை

(அலுவலக செய்தியாளர்)

அவசரகாலச்சட்டம் தனிமனித சுதந்திரத்தையும் உரிமைகளையும் எதேச்சாதிகாரமாக மறுக்கும் செயலென கிளிநொச்சியில் அமைந்துள்ள வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; எந்தவொரு சனநாயகத்திலும், அரசினால் ஆக்கப்படும் பிரகடனங்கள், கட்டளைகள், சட்டவிதிகள், பிரசித்தமான சிவில் உரிமைகள் இயக்கங்கள், நூலகங்கள் ஆகியவற்றுக்கு உரிய நேரத்திற்கு கிடைக்காமையும், நீதிபதிகள், நீதிவான்களுக்கு மாதக்கணக்கில் கிடைக்காமையும் மக்கள் தங்கள் உரிமைகள் கடமைகள் என்பது பற்றி நிச்சயமற்ற நிலைமையும் முக்கியமாக வெளிமாவட்ட நீதிபதிகள் இருட்டில் விடப்பட்டு முறையான நீதி பரிபாலனம் செய்யமுடியாமையும் மன்னிக்கமுடியாத விடயமாகும். சுனாமி கடற்கோள் அனர்த்தத்திற்கு பின்னதாக பாதிக்கப்பட்ட பதிநான்கு மாவட்டங்கள் பற்றிய 01-01-2005 இடப்பட்ட முதலாவது அவசரகாலப்பிரகடனம் அரச வர்த்தமாணி அறிக்கை (No:1374/8) அரசியல் யாப்பின் விதிகளுக்கு அமைவாக பதின்நான்கு நாட்களுக்குள் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறாமையால் வலு வற்றதானது. இரண்டாவது முறையாக பிரகடனப்படுத்தப்பட்டு 03-02-2005 வர்த்தமாணியில் வெளியிடப்பட்டு 11-01-2005 பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட அவசரகாலச் சட்டம் 11-03-2005 மட்டும் அமுலிலிருக்கும் . எனவே கடந்த 04-01-2005 இருந்து 18-01-2005 மட்டும் நடைமுறையில் இருந்த பின்னர் 19-01-2005 இருந்து 10-02-2005 மட்டும் அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருக்க வில்லை. எனினும் இக்கால கட்டத்தில் இச்சட்டம் அமுலில் இருந்தாகக் கருதி அவர்கள் அப்படியே செயற்பட்டதாக இரு அரச அதிபர்களும் (காலி, மாத் தறை) அரச படைப் பேச்சாளர் பத்திரிகைகளுக்கு கூறியிருக்கிறார். பெப்ரவரி மூன்றாம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதாகக் கூறப் படும் பாரிய அவசரகாலச் சட்டங் கள் அசுத்ததனமாக, காலத்தின் தேவையை மீறியது மாகும். அதன் பல உறுப்புரைகள் பிரஜைகளின் உரிமைகளை மட்டுப்படுத்துவதுடன், அவர்களின் அடிப்படை உரிமை மீறல் அல்லது அரசின் ஏதேச்சாதிகராச் செயலுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுப்பதால் சட்டமா அதிபரின் அதிகாரத்தைப் பெறவேண்டியுள்ளது. சில அதிகாரிகளுக்கு விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டு இருக்கும் நபர் ஒருவரை எந்தவொரு தடுப்பு முகாமுக்கும் கொண்டு சென்று அவரின் தற்காலிக காவலின் கீழ் ஏழு நாட்களுக்கு மேற்படாமல் வைத்திருக்கும் உரிமை நியாயப் படுத்த முடியாது. ஏனெனில் தடுப்புக்கா வலிலுள்ள நபரின் பாதுகாப்புக்கோ தீங்கின்மைக்கோ எந்த விதமான உத்தரவாதமும் கிடையாது. தேடுதல் பிடிவிறாந்து இல்லாமல் கைதுசெய்தல் போன்ற செயற்பாடுகளுக்கு மிதமிஞ்சிய அதிகாரம் கொடுக்கப்பட்டு இருப்பது அடிப்படை உரிமைகளை பாதிப்பதோடு இந்தச் சட்டங்களில் சில சரத்துக்கள் சான்று கட்டளைச்சட்டத்தில் கூறப்படும் சில விதிகளுக்கு எதிராகவும் அமையலாம். அத்தோடு இச்சட்டங்கள், காணிகள் , சொத்து உரிமைகளை மிக மோசமாக மட்டுப்படுத்துவதாக அமையலாம். சர்வதேச சிவில் அரசியல் உரிமைகள் சாசனத்தில் விருப்பு விதிகளின் கீழ் ஐ.நாவின் மனித உரிமைகள் குழு இந்த நாட்டைச் சேர்ந்த நல்லரெட்ணம் சிங்கராசாவின் விடயத்தில் (1033/2001/ இலங்கை (3.08.2004) சி.சி.வி.ஆர்/சி/81/1033/2001) வெளியிடப்பட்ட கருத்துக்களைப் பார்க்கும் போது இந்த விதிகளில் சில மேற்கூறப்பட்ட சாசனத்தில் இரண்டாம் உறுப்புரையின் சில பகுதிகளுக்கு முரணாக அமையலாம். இந்தக் கருத்து மற்றுமோர் அரக்கத்தனமான 1979 ஆம் ஆண்டில் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டத்திற்கும் பொருந்தும். இந்த விடயத்தில் வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகம் சென்ற காலங்களில் தங்களுக்குத் கிடைத்த அனுபவத்தின் அடிப்படையில் இத்தீவின் வடக்கு கிழக்கில் வசிக்கும் மக்கள் இச் சட்டங்கள் எதேச்சாதிகாரமாக பிரயோகிக்கப்பட்டு தங்கள் தனிமனித உரிமைகள் சொத்துரிமைகள் மீறப்படலாம் எனப்பயப் படுகிறார்கள் என்னும் உரிமையைப் பதிவு செய்ய விரும்புகின்றது. இந்தச்சட்டங்கள் நீடிக்க விடலாகாது. பாராளுமன்றத்தில் இந்தச் சட்டத்திற்கு எதிராகப் பெரிதாகப் பேசிவிட்டு பின்னர் அதற்கு எதிராக வாக்களிக் காமல் விடுபவர்களும இந்தச் சட்டத்தை கொண்டு வந்த அரசாங்கத்தைப் போலவே குறை கூறப்பட வேண்டியவர்களே ஆகும். (சோ)

### -சனாதிபதி சந்திரிகா ஏற்பாடு செய்த-

# முன்னாள் அமெ. சனாதிபதிகளுடனான விருந்துக்கு கூட்டமைப்புக்கு அழைப்பில்லை

முன்னாள் அமெரிக்க சனாதிபதிகளின் வருகையினை முன்னிட்டு சனாதிபதி ஏற்பாடு செய்த இரவு விருந்திற்கு தமிழ்க் கூட்டமைப்பு அழைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் தமிழ்க் கூட்டமைப்பிற்கு அழைப்பு அனுப்பிவைக்கப்பட வில்லையென பாராளுமன்றக் குழுத்தலைவர் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க சனாதிபதிகள் கலந்து கொண்ட விருந்தை தமிழ்க் கூட்டமைப்பு புறக்கணித்ததாக வெளியான செய்தி தவறானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (32)

### -திருகோணமலை மாவட்டத்தில்-

# தற்காலிக வீடுகள் அமைக்கும் பொறுப்பு 18 அ.சா.நிறுவனங்களிடம் ஒப்படைப்பு

திருகோணமலை மாவட்டத்தில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இடம் பெயர்ந்த குடும்பங்கள் தங்கி வாழ்வதற்கு தற்காலிக விடுதிகளை அமைக்கும் பொறுப்பு பதினெட்டு சர்வதேச மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற தொண்டர் அமைப்புக்களுக்கு ஒப்படைக்கப்பட்டது.

நேற்று புதன்கிழமை காலை திருகோணமலை மாவட்டச்செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட செயலணியின் தங்குமிட வசதிகள் உப குழுக் கூட்டத்தில் அரச அதிபர் காமினி ரொட்ரிகோ இதனை அறிவித்தார். வீஸ், கிண்ணியா விஷன் எஹெட், சேவாலங்கா, ஒபர், ஒக்ஸ்பாம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், துறைமுக அதிகாரசபை, தமிழர் புனர்வாழ்வுக்கழம், கெயார், திருகோணமலை மாவட்ட முன்னேற்ற சங்கம், யு.என்.எச்.சி.ஆர், சோவா, டனிஸ் அகதிகள் சபை, சர்வதேச புலம்பெயர்ந்த அமைப்பு ஆகியன தற்காலிக விடுதிகள் அமைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நிறுவனங்கள் சிலவாகும். (25)

# அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரண்

### -உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான சட்ட மூலம் அரசியலமைப்பிற்கு முரணானது என அறிவிக்கப்பட்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான சட்ட மூலத்தின் சில சரத்துக்கள் அரசியலமைப்பிற்கு முரணானது என குறிப்பிட்டுள்ள உயர் நீதிமன்றம் அவை திருத்தம் செய்யப்பட வேண்டும் எனவும் பரிந்துரை செய்துள்ளது.இந்த சட்ட மூலம் நடைமுறைப் படுத்தப்படுவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் லொக்குபண்டார பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார். (32)

# காலந்தாழ்த்தியேனும் அரசாங்கம் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டுள்ளது

**-ஐ.தே.க பா.உ.பந்துல குணவர்த்தன**

(கொழும்பு)

அரசாங்கம் இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாகக்கொண்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளமை காலம் தாழ்த்தியேனும் யதார்த்தத்தை புரிந்துகொள்ளும் ஒரு செயலென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்த உடன் படிக்கையின் மூன்றாம் ஆண்டு நிறைவு தினத்தையொட்டி அரசு ஊடகத் திணைக்களம் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில் இடைக்கால அதிகாரசபை குறித்து அரசு பேசுவதற்குத் தயாராவுள்ளதெனக் குறிப்பிட்டிருந்ததைச் சுட்டிக் காட்டியே பந்துல குணவர்த்தன இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில் ;ஒஸ்லோ பிரகடனம் மற்றும் தேசிய மாநாட்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட இணக்கப் பாட்டின் அடிப்படையில் அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தையை முன்கொண்டு செல்லுமாயின் அதற்குத் தமது ஒத்துழைப்பு எப்பொழுதும் உண்டென ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே தெரிவித்திருந்தது எனக் கூறிய அவர் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு மூன்று வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள சந்தர்ப்பத்தில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் நாட்டிற்குத் தேவையான தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றென அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தத்தினால் மனித உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றமை நிறுத்தப்பட்டது. சொத்து இழப்புக்களும் இல்லாது செய்யப்பட்டன.

இவை தவிர யுத் நிறுத்த உடன் படிக்கையை தளமாகக் கொண்டு இடைக்கால நிர்வாகத்தினூடாக அரசியல் தீர்வொன்றைக்காணும் யோசனையை செயல்படுத்தும் நிலைப்பாட்டில் அரசாங்கம் வந்துள்ளது.

காலந்தாழ்த்தியேனும் அரசாங்கம் இந்த நிலைப்பாட்டிற்கு வந்துள்ளது என்றார்.

இதேவேளை பேச்சுவார்த்தை தொடர்பில் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கைக்கு முற்றிலும் வேறுபட்டதாக நேற்று அரசாங்கம் கருத்துவெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

-வவுனியாவில் கடத்தப்பட்ட சிறுமி-

# கிளிநொச்சி நீதி மன்றினால் பெற்றோரிடம் ஒப்படைப்பு

வவுனியாவில் கடந்த 30ஆம் திகதி கடத்தப்பட்ட சிறுமி கிளி.மாவட்ட நீதிமன்றினால் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக சந்தேக நபர் ஒருவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வவுனியா குருமன் காட்டுப்பகுதியில் கல்வி கற்பதற்காகச் சென்ற 14 வயதுச் சிறுமியான சிவரட்ணராஜா நிறோஜா என்பவர் கடத்தப்பட்டுள்ளார். இவரைக் கிளிநொச்சிக் காவல்துறையினரின் தீவிர புலனாய்வு நடவடிக்கையின் பிரகாரம் அச்சிறுமி மீட்கப்பட்டதுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டு கிளி.மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட வேளை நீதிமன்றினால் அச்சிறுமியை பெற்றோரிடம் கையளிக்கப்பட்டதுடன் அச்சந்தேக நபரை தொடர் நடவடிக்கைக்காக விளக்க மறியலில் வைக்குமாறு காவல் துறையினருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

# அனுருத்த ரத்வத்த சார்பாக சரத் அமுனுகம சாட்சியம்

உடத்தலவின்ன பத்து நபர்களின் படுகொலை சம்பந்தமாக முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் சார்பாக சாட்சியமளிப் பதற்கு நிதி அமைச்சர் சரத்அமுனுகம அழைக்கப்பட்டுள்ளார்.அமுனுகமவின் பெயரைஅனுருத்த ரத்வத்த குறிப்பிட்டுள்ளார். ஆகவே அவரை இம்மாதம் 24 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உயர் நீதிமன்ற நீதி அரசர் அழைப்பானை விடுத்துள்ளார்.

## சாவு அறிவித்தல்



நாட்டுப்பற்றாளர்

**வே.க.ஏரம்பு**

**அருனோதயம்-புங்குடுதீவு**

நேற்றைய தினம் (23-02-2005) இயற்கை எய்தியுள்ளார். இவர் சின்னம்மாவின் அன்புக்கணவரும் அருணாதேவி, பிரிதரன், மதிவதனி, பாலச்சந்திரன்(மாவீரர்) ஆகியோரின் தந்தையும் குமாரதாஸ், சாந்தினி, பிரபாகரன் ஆசியோரின் மாமனாரும் ஆவார். இவரது உடல் இன்று நண்பகலில் இருந்து அரசியல் துறை-தூயவன் அரசறிவியல் கல்லூரியில் அஞ்சலிக்காக வைக்கப்படும். இறுதி நிகழ்வு பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மனைவி,*
*பிள்ளைகள்,மருமக்கள்.*

## ஹக்கீமுடன்...

ளுக்காக உத்தேசிக்கப் பட்டுள்ள கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கும்இடமளிக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவியவருகிறது.

இதேவேளை நோர்வேயின் சிறப்புதூதர் எரிக்சூல்ஹய்ம் நேற்று நிதி அமைச்சரை சந்தி த்தார். நிதிஅமைச்சர் சரத் அமுனு கமவை சந்தித்த அவர் இலங்கையில் சுனாமிபேரலை தாக்கத்தின் பின்னர் மேற்கொள்ளப்படும் புனரமைப்புத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்தசந்திப்புநிதி அமைச்சில் இடம்பெற்றது.(32)

## ஆளும்..


உயர்பதவிகளுக்கு அரசியல் ரீதியாகவே நியமனங்கள் வழங்கப் படுகின்றன. இந்த நிலை தொடரும் பட்சத்தில் ஜே.வி.பி மாகாண சபைக் குழுதீர்க்கமானமுடிவுகளை எடுக்கும் நிலைஉருவாகும்என எச்சரித்துள்ளார். (32)

—சுனாமியால் பாதிக்கப்பட்ட —

# 32 யாழ். பல்கலை மாணவர்களுக்கு நிதி உதவிகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சுனாமி இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ். பல் கலைக் கழகத்தைச் சேர்ந்த 32 மாணவர்களுக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒழுங்கமைப் பினருடன் சேர்ந்து நிதி உதவி வழங்கும் நிகழ்வு நேற்று மாலை 4-30 மணியளவில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் இடம் பெற்றது. இந்நிகழ்வின் முதல் நிகழ்வாக பொதுச் சுடரினை யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ், யாழ்ப்பாண பல் கலைக்கழக சிரேஷ்ட விரிவுரை யாளர் கலாநிதி புஸ்பரட்ணம், யாழ். பல்கலைக்கழக மாணவ ஒன்றியச் செயலாளர் சிவகரன், யாழ். மாவட்ட தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒழுங்கமைப்பு நிறுவனத்தைச் சேர்ந்த பிரதீபன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். அதனைத்தொடர்ந்து தேசியக் கொடியை




யாழ்.மாவட்ட துணை அரசியல் துறைப்பொறுப்பாளர் கண்ணன் ஏற்றி வைத்தார்.

அதனை தொடர்ந்து சிறப்புரையினை பேராசிரியர் மோகனதாஸ், யாழ் . பல்கலைக்கழகமாணவ ஒன்றிய செயலாளர் சிவகரன் , யாழ். நல்லூர்கோட்ட மகளிர்அரசியல்துறைப் பொறுப்பாளர் பூமகள், தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பைச் சேர்ந்த கபேஸ்கர் ஆகியோர் நிகழ்த்தினர். அதனை தொடர்ந்து பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு தலா 5000 வீதம் 32 மாணவர்களுக்குமான உதவுதொகையை பேராசிரியர் மோகனதாஸ், யாழ். மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் கண்ணன், சர்வதேச தமிழீழ மாணவர்பேரவை பொறுப்பாளர் கண்ணன், விரிவுரையாளர் கலாநிதிபுஸ்பரட்ணம் ஆகியோர்வழங்கினர். (36)

## சுனாமியால்..

இணைப்பாளர் செல்வி. அஞ்சலின் ஏற்றிவைத்தனர்.

முல்லைக் கல்விவலய உதவிக் கல்விப்பணிப்பாளரும் கட்டமைப்பின் மாவட்டத்தலைவருமான வே.ஜெயம்சபாவதி வரவேற்புரையை நிகழ்த்திய இந்த நிகழ்வில் சிறப்புரைகளை தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப் பணிபபாளர் ரீகன், யாழ்.மாவட்டப் பணிப்பாளர் க.ஜெயராச் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து சாவடைந்த வடமராட்சி கிழக்கு முல்லைத்தீவுப் பிரதேசங்களைச் சேர்ந்த நான்கு முன்பள்ளி ஆசிரியர்கள் குடும்பத்தினருக்கு தலா 15000 ஆயிரம் ரூபா வீதம் 60 ஆயிரம் ரூபா உதவித்தொகை வழங்கப்பட்டதுடன், பாதிப்புற்ற 83 ஆசிரியர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்பட்டன.

தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் சே.பாண்டியன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் முல்லை மாவட்ட அரசியல்துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் வேழினி,முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் மூர்த்தி,சிறுவர் நலன் திட்டப் பொறுப்பாளர் ரவி,பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர், பிறையாளன், முன்பள்ளி அபிவிருத்தி இணைப்பாளர், ஆசிரியர்கள்,கட்டமைப்பு நிர்வாக உறுப்பினர்கள், பெற்றோர்கள், புனாழ்வாழ்வுக் கழகப் பணியாளர்கள்,உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்வானது முன்பள்ளி கல்வி மேம்பாட்டுத்திட்ட ஒருங்கிணைப்பாளர் கணேசலிங்கத்தின் நிறைவுரையுடன் இனிது நிறைவுபெற்றது. (கு,ச)

## இடைக்கால...

மூலம் வடக்குகிழக்கு மாகாண புனர் நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படும் அதேவேளை நிரந்தரத் தீர்வு குறித்த நகர்வுகளையும் முன்னெடுக்கமுடியும் என்று அரசாங்கம் கருதுகின்றது. விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபை யோசனைகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களை நடத்த முடியாது என்றும் தமது மாற்று யோசனைகளும் முன்வைக்கப்படும்

என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.இதேவேளை இடைக்கால நிர்வாக சபை யோசனைகள் தொடர்பான பேச்சுக்கள் நடைபெறும் சமகாலத்தில் இறுதித் தீர்வு குறித்தும்பேசப்பட வேண்டும் என்ற அரசின் நிலைப்பாட்டை விடுதலைப்புலிகள் ஏற்கனவே நிராகரித்துள்ள நிலையில் சமாதானப்பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்கும் சாத்தியங்கள் எதுவும் அரசாங்கத்தின் நேற்றைய அறிவிப்பில் காணப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்த நிவாரணங்களை கையாள்வது தொடர்பில் அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் விரைவில் இணக்கப்பாடு ஏற்படும் நிலை காணப்படுவதாக அரசாங்க சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ஜெயந்த தனபால தெரிவித்துள்ளார்.நோர்வே ஏற்பாட்டாளர்களின் அனுசரணையுடன் இது தொடர்பில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெற்று வருவதாகவும் விரைவில் இணக்கப்பாடு ஒன்று ஏற்படுமென தான் நம்புவதாகவும் ஜெயந்த தனபால குறிப்பிட்டுள்ளார்.வடக்கு கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அனர்த்த நிவாரணப் பணிகளில் இணைந்து செயல்படுவது மற்றும் சர்வதேச நிவாரண உதவிகளை கையாள்வது தொடர்பில் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்தும் விதமாக பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## துப்பாக்கிச....

முடியவில்லை. இது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அவ்விடத் திற்குச் சென்றுதிரும்பும்வரை நாங்கள் காத்திருக்கப் போகின்றோம். அவர்கள் வந்தபின்னர் எல்லா விபரமும் எங்களுக்குத் தெரிய வரும் என்றார்.இதேவேளை சம்பவம் நடைபெற்ற பிரதேசத்திற்கு தமது கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளை அனுப்பியுள்ளதாக கண்காணிப்புக் குழுவின் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார். இதே வேளை இருதரப்பினருடனும் தங்களுக்குத் தொடர்பு இருப்பதாகவும் கண்காணிப்புக் குழு உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

## வடகிழக்கு

சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். மேற்படிகூட்டத்தில் சுனாமியினால் உளவளம் பாதிப் படைந்தோருக்கு எவ்வாறான ஆலோசனைகள் வழங்குவது என்பது தொடர் பாக கலந்துரையாடப்பட்டதுடன் வடகிழக்கு மாவட்டங்களில் இவ் வேலைத்திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்கென மாவட்டரீதியாக பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பெற்றனர்.

மட்டு.அம்பாறை மாவட்டத் திற்கென வைத்திய கலாநிதி கணேசன் அவர்களும்,திருமலை மாவட்டத்திற்கென வைத்திய கலாநிதி கடம்பநாதன் அவர்களும், யாழ்.மாவட்டத்திற்கென மருத்துவ விரிவுரையாளர் பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்களும், வன்னி மாவட்டத்திற்கென வைத்திய கலாநிதி சிவதாசன் அவர்களும் நியமிக்கப்பெற்றனர். கட்டமைப்பின் துணை இணைப்பாளராக வைத்திய கலாநிதி ச.விக்கினேஸ்வரன் நியமிக்கப்பெற்றுள்ளார்.

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் மேற்படி வடகிழக்கு உளவளத் துணை கட்டமைப்பு கூட்டம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது